# சுதந்திரப் பறவைகள்

பறவை 09    பாடல் 02    1994 மாசி    அன்பளிப்பு ரூபா 5.00


## கரவெட்டியில் கிராமியப்பாசறை

## பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

**சென்றவாரம் வடமராட்சியிலுள்ள கரவெட்டி என்னும் இடத்தில் உள்ள இராஜகிராமத்தில் நடைபெற்ற கிராமியப் பாசறையின்போது, அங்கு வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன.**

**இப்பிரச்சினைகள் அனைத்துக்கும் மூலகாரணியாக இருப்பது கல்வியறிவின்மை என்பது தெளிவாகியது. இது குறித்து ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.**



கரவெட்டியில் எம்மால் செய்யப்பட்ட ''கிராமியப்பாசறை'' நிகழ்வின்போது, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த பெண் போராளி சிறுவர்களுக்கு, மருந்து கொடுப்பதை மேலேயுள்ள படத்திலும்,

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த பெண் போராளி, பெண்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொள்வதைக் கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

விடுதலைப்புலிகளின் அரசியற்றுறையால் நடாத்தப்பட்ட கிராமியப் பாசறையின் போது பல பிரச்சினைகள் பற்றி நேரடியாக ஆராயப்பட்டன. 1994-02-15 அன்று தொடக்கம் 1994-02-19 வரையான ஐந்து நாட்களும் நடாத்தப்பட்ட கிராமியப்பாசறையின்போது இக்கிராமத்தில் வாழும் மக்களிடையே காணப்பட்ட பிரச்சினைகள் குறித்து அவர்கள் மத்தியில் இறங்கிப் பார்த்தபோது பல பிரச்சினைகளின் காரணங்கள் தெளிவாகின.

நெல்லியடியிலிருந்து ஏறத்தாழ 300 யார் தூரத்தில் அமைந்துள்ள இராஜகிராமம் 287 குடும்பங்களைக் கொண்ட மிகவும் பின்தங்கிய கிராமமாகும். 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் எடுக்கப்பட்ட தகவல்களின்படி கிராமத்தின்

ணப்படுகின்றது. இக்கல்வியறிவற்ற தன்மையானது பல பிரச்சினைகளை அவர்கள் மீது அழுத்தியுள்ளது.

எமது சமூக அமைப்பைப் பொறுத்தவரை ஏறக்குறைய ஒரு குடும்பத்தின் சகலவிடயங்களையும் தாங்கி நிற்பவள் தாய். இதனால் அவள், குடும்பத்தின் சகல பிரச்சினைகளுக்கும் முகங் கொடுக்க வேண்டியவளாகிறாள்.

இந்தநிலையில் படிப்புவாசனையே அறியாத தாய்மாரின் எண்ணிக்கையே இங்கு அதிகம். இப்பாரிய பிரச்சினையானது இச்சமுதாயத்தை பலவழிகளிலும் பாதித்துள்ளமை ஆழநோக்குதற்குரியது.

தாய்மாரின் குடும்ப ஆளுமையற்ற தன்மை சிறுவர், சிறுமியரின் எதிர்கால வாழ்க்கையை வளர்ச்சியற்ற, குறை

**சென்றவாரம் வடமராட்சியிலுள்ள கரவெட்டி என்னும் இடத்தில் உள்ள இராஜகிராமத்தில் நடைபெற்ற கிராமியப் பாசறையின்போது, அங்கு வாழும் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன.**

**இப்பிரச்சினைகள் அனைத்துக்கும் மூலகாரணியாக இருப்பது கல்வியறிவின்மை என்பது தெளிவாகியது. இது குறித்து ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.**

*விடுதலைப்புலிகளின் அரசியற்றுறையால் நடாத்தப்பட்ட கிராமியப் பாசறையின் போது பல பிரச்சினைகள் பற்றி நேரடியாக ஆராயப்பட்டன. 1994-02-15 அன்று தொடக்கம் 1994-02-19 வரையான ஐந்து நாட்களும் நடாத்தப்பட்ட கிராமியப்பாசறையின்போது இக்கிராமத்தில் வாழும் மக்களிடையே காணப்பட்ட பிரச்சினைகள் குறித்து அவர்கள் மத்தியில் இறங்கிப் பார்த்தபோது பல பிரச்சினைகளின் காரணங்கள் தெளிவாகின.*

*நெல்லியடியிலிருந்து ஏறத்தாழ 300 யார் தூரத்தில் அமைந்துள்ள இராஜகிராமம் 287 குடும்பங்களைக் கொண்ட மிகவும் பின்தங்கிய கிராமமாகும். 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் எடுக்கப்பட்ட தகவல்களின்படி கிராமத்தின் மொத்த சனத்தொகையில் 53.7 வீதம் பெண்களாவர்.*

*கல்வியறிவிலே மிகவும்தாழ்ந்த நிலையில் உள்ள இக்கிராமத்தில் பெண்களின் நிலை பரிதாபத்துக்குரியதாகக் காணப்படுகின்றது. இக்கல்வியறிவற்ற தன்மையானது பல பிரச்சினைகளை அவர்கள் மீது அழுத்தியுள்ளது.*

*எமது சமூக அமைப்பைப் பொறுத்தவரை ஏறக்குறைய ஒரு குடும்பத்தின் சகலவிடயங்களையும் தாங்கி நிற்பவள் தாய். இதனால் அவள், குடும்பத்தின் சகல பிரச்சினைகளுக்கும் முகங் கொடுக்க வேண்டியவளாகிறாள்.*

*இந்தநிலையில் படிப்புவாசனையே அறியாத தாய்மாரின் எண்ணிக்கையே இங்கு அதிகம். இப்பாரிய பிரச்சினையானது இச்சமுதாயத்தை பலவழிகளிலும் பாதித்துள்ளமை ஆழநோக்குதற்குரியது.*

*தாய்மாரின் குடும்ப ஆளுமையற்ற தன்மை சிறுவர், சிறுமியரின் எதிர்கால வாழ்க்கையை வளர்ச்சியற்ற, குறைபாடுடைய பாதையில் செல்வதற்கு வழிவகுத்திருக்கிறது.*

*குடும்பத்திட்டமிடலில் ஏற்படும் தவறுகள், பொருளாதார பலமற்ற நிலை, இவற்*
*(12ஆம் பக்கம் பார்க்க)*



கரவெட்டியில் எம்மால் செய்யப்பட்ட "கிராமியப்பாசறை" நிகழ்வின்போது, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த பெண் போராளி சிறுவர்களுக்கு மருந்து கொடுப்பதை மேலேயுள்ள படத்திலும்,

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த பெண் போராளி, பெண்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொள்வதைக் கீழேயுள்ள படத்திலும் காணலாம்.



## உள்ளே


(:) பாரதி மாணவர் இல்லம்
(:) மீன்பாடும் தேன்நாட்டின் தாய்மார்கள்
(:) பெண்ணின் அறிவுசார் நிலைப்பாட்டின் முன்னேற்றமே பெண்ணின் நிலையை மாற்றும்
(:) நியதிகள் மாறும்
(:) பறவையுடன் உங்கள் மனப் பதிவுகள்
(:) மனங்களைத் திறவுங்கள்
(:) அரசியலில் ஆணாதிக்கம்
(:) பொருளாதார ஆய்வில் குடும்பப்பெண்


# விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏ

எங்கள் பார்வையில்....

# சீதனத் தடைச் சட்டம்

தமிழ்ச் சமூகத்தின் மேலான நல்வாழ்வைச் சிதைப்பதில் சீதனமும் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. வெளிப்பார்வைக்கு இது பெண்களைமட்டும் பாதிப்பதுபோலத் தோன்றினாலும், உண்மையில் மொத்தச் சமூகமுமே பாதிப்புக்குள்ளாகின்றது.

சீதனம் என்பது எந்த நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திலிருந்து விலகிவிட்டது. திருமண வயதை நெருங்கிக் கொண்டிருக்கும், கடந்துகொண்டிருக்கும் பெண்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் இது ஒரு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிட்டது.

ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை பெண்களில் பெரும்பாலானோருக்கு சுயமான பொருளாதார அடித்தளம் இல்லை. உழைக்கும் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. ஆகவே தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கான சீதனத்தைத் தாமே சேகரிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவே. பெரும்பாலும் இவர்களுக்கான சீதனத்தைச் சேகரிப்பது இவர்களின் ஆண் சகோதரர்களாகவோ, அன்றி தந்தைமாராகவோதான் இருப்பர். சில வேளைகளில் சீதனம் தாய்வழிச் சொத்தாகவும் அமைந்து விடுவதுண்டு.

எப்படிப் பார்த்தாலும், ஒரு ஆணும் பெண்ணும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் பொருட்டு பலர் தமது உழைப்பைச் செலவிடுகின்றார்கள். சீதனம் கொடுக்கமுடியாத நிலையால் மணவாழ்வின்றி வாடும் பெண்கள், தம் குடும்பத்துப் பெண்களின் வாழ்வுக்கென உழைப்பதிலேயே தம் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழிக்கும் ஆண்கள் என ஒட்டுமொத்தமாக முழுச் சமுதாயமுமே இந்தச் சீதன நடைமுறையால் பாதிப்புக்குள்ளாகின்றது.

தமிழீழ விடுதலைக்காக நாம் போராடிக்கொண்டிருக்கின்ற அதே நேரம், எமது இனத்தைச் சிதைக்கும் தன்மை வாய்ந்த சீர்கேடுகளை நீக்கவேண்டிய கடமையும் எமக்குண்டு. அதனால்தான் எங்களெல்லோரையுமே பாதிப்புக்குள்ளாக்குகின்ற 'சீதனம்' என்ற நடைமுறையை இல்லாதொழிக்க முனைந்துள்ளோம்.

சமுதாயத்தில் எவ்வெப்போது சீர்கேடுகள் எழுந்தனவோ, எழுகின்றனவோ அவ்வப்போதெல்லாம் புதிது புதிதாகச் சட்டங்கள் இயற்றப்பட்டன; இயற்றப்படுகின்றன. அதாவது மக்கட் சமூகத்தில் எழுகின்ற சீர்கேடுகளைக் களையும் நோக்குடனேயே சட்டங்கள் எழுதப்படுகின்றன.

எழுதப்படுகின்ற சட்டங்கள் எல்லாமே சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவது சாத்தியம் இல்லைதான். சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் தோன்றலாம். சட்டங்களைத் தவறான வழியில் பயன்படுத்துவோரும் உளர். எனவே சட்டங்கள் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டுக்கொண்டேயிருக்கும்.

அதுபோலதான் சீதனத் தடைச் சட்டமும். இப்போது உள்ள நிலைமைகளைக் கருத்தில்கொண்டு சீதனத் தடைச் சட்டம் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் எழுகின்ற சிக்கல்களைப் பொறுத்து இது திருத்தி அமைக்கப்படும்.

சீதனத்துக்கு எதிரான தடைச்சட்டத்தின் வெற்றி தமிழீழ மக்களின் கைகளிலேதான் தங்கியுள்ளது.

# பாரதி மாணவர் இல்லம்

தமிழர்களின் பாரம்பரியச் சொத்தான கல்வியைச் சிதைத்துவிட சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகப் பலவகையிலும் முயன்றுவருகின்றது. தனது உச்சக்கட்ட நடவடிக்கையாக பாடசாலைகள் மீது விமானக் குண்டு வீச்சுக்களை நடாத்தி வருகின்றது. இதனால் மாணவர்களை உளரீதியாகப் பாதிப்படையச் செய்து, அதன் மூலம் தமிழர்களின் கல்வியை அழித்துவிடலாம் என்று பேரினவாத அரசு எண்ணுகிறது.

இலங்கை அரசின் இந்த நோக்கத்தைத் தகர்க்கும் நோக்குடனும் தமிழ் மாணவரின் கல்வியை வளர்க்கும் நோக்குடனும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் தமது வேலைகளை விரிவாக்கி வருகின்றனர். அவர்களின் நடவடிக்கைகளுள் ஒன்றாக பாரதி மாணவர் இல்லம் 1993 - 02 -15 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இது விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவினரின் வேலைத் திட்டங்களுள் ஒன்றாகும். தற்போது யாழ். மாவட்டத்தில் மட்டும் ஒரே ஒரு இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.



ஐந்து மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் இல்லம் இன்று ஏறத்தாழ அறுபது மாணவிகளுடன் இயங்குகின்றது. கல்வி பயிலும் ஆர்வத்தோடு வறுமையால் வாடிக்கொண்டிருக்கும்மாணவிகளைத் தேர்ந்தெடுத்து கல்வி பயில்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கும் பணியில் பாரதி மாணவர் இல்லம் ஈடுபட்டிருக்கின்றது.

இந்த இல்லம் ஏறத்தாழ ஒரு மாணவ விடுதி போலவே செயற்படுகின்றது. மாணவிகளுக்கு வேண்டிய உணவு, உடை, பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் எல்லாமே இங்கு வழங்கப்படுகின்றன. காலையில் வழமை போலவே பாடசாலைகளுக்கு போய் மாலையில் திரும்பி வருகிறார்கள். ஏற்கனவே தாம் கற்ற கல்லூரிகளிலேயே தொடர்ந்தும் கல்வி பயிலச் செல்கின்றார்கள்.

மாலை வேளைகளில் இவர்களின் கலையுணர்வுகளுக்கேற்ப இசை நடன பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு இத்திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பாலர் வகுப்பு முதல் உயர்தர வகுப்பு வரையிலான மாணவிகள் பாரதி மாணவர் இல்லத்தினால் தம் கல்வியைத் தொடருகின்றார்கள். கல்வியில் ஆர்வமும் சகோதரத்துவ உணர்வும் கொண்டவர்களாக இவர்கள் இங்கே வளர்கின்றார்கள். இவர்களை மேலும் சிறப்பாக வளர்ப்பதற்கும் இத்திட்டத்தை நாட்டின் பலபகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதற்குமான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மகளிர் பிரிவினர் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமது பணிக்குத் தேவையான சகல உதவிகளையும் தமிழீழ மக்களிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றனர்.

# மீன்பாடும் தேன்நாட்டின் தாய்மார்கள்

வயலிலே உழுவதும், விதைப்பதும், மீன்கள் பாடும் வாவியில் வலை வீசுவதும், ஓய்வு நேரங்களில் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களை ஆடிக் களிப்பதுமாய்...

ஒருகாலத்தில் மட்டக்களப்பு தமிழர்கள் வாழ்ந்தனர். வானம்பொழிந்தது; பூமிவிளைந்தது; மீன்கள்பாடின. எனவே மக்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். இன்று அந்த மக்கள் மகிழ்ச்சி என்றால் என்ன என்பதே அறியாது, அழுதுகொண்டேயிருப்பதைத் தவிர வேறெதுவுமே செய்ய வழியில்லாமல்... ஆனாலும் சோகங்களின் நடுவேயும் அவர்கள் நிமிர்ந்துநிற்க முயன்று கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் மட்டு நகரிலிருந்து இன்றும் புதிய புலிவீரர்கள் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள். சிறீலங்கா இராணுவத்தின் அழுத்தங்களுக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இருந்தால் அன்று அந்த ஊரில் தேடுதலும், கைது செய்தலும் நடைபெறப்போகின்றது என்று அர்த்தம்.

சுற்றிவளைப்பு நடைபெறும் விதத்தை ஒரு அன்னை விபரித்தார்.

''எங்கட ஊரை ரவுண்டப் செய்ய வேணுமெண்டா சுத்திவெர இருக்கிற நாலைஞ்சு ஊரைச் சுத்தி நிப்பாங்க. பிறகு அப்படியே நெருங்கி நெருங்கி எல்லாப் பக்கத்தாலையும் ஒரே நேரத்திலை வெருவாங்க. ஒரு பக்கத்தாலையும் ஓடேலாது. விடியச்சாமத்தில எல்லாரையும் பிடிச்சுக்கொண்டு போய் இருத்துவாங்கள். கண்ணைத் தவிர முழு உடம்பையுமே சாக்கால மூடிக் கட்டியிருக்கிற தலையாட்டிக்கு முன்னாலை நிப்பாட்டுவாங்கள். தலையாட்டி யாரையாவது பார்த்து தெலையாட்டினா அவ்வளவுதான்; பிறகு உயிரோடை இருக்கேலாது. ராவு எட்டுமணி, ஒம்பது மணியள

''ஆமி வாறான் எண்டா எங்கட ஊர் நாயெல்லாம் கொலைக்கும். 'புலி வாறது எண்டா கொலைக்கிறதில்லை. நாங்க வாறது எண்டா கொலைக்குது' எண்டு சொல்லி நாய் எல்லாத்தையும் சுட்டுப் போட்டாங்க.

சின்னப் பிள்ளைகளைப் பிடிச்சு, துவக்கைக்காட்டி ''மாமாமார் இது போல கொண்டு வாறதா'' எண்டு டொபி எல்லாம் வாங்கிக் குடுத்துக் கேப்பானுங்கள். நாங்க பெயத்தில, ஆமி வாறான் எண்டா புள்ளையளை ஒளிச்சுப்போடுவம்.''

''இரவுல வருவாங்க. கொஞ்சம் வசதியான ஊட்டு வாசலிலபோய், 'அம்மா, அம்மா' எண்டு கதவைத் தட்டி, 'நாங்கள் இயக்கம். நாங்க சைலன்ட் (அமைதி) குறாப்பில இருந்து வெருகிறம் தோணியில வந்தனாங்க. கொஞ்சப்பேர் ஆத்துக்கு அந்தக் கெரையில நிக்கிறாங்க. எங்களுக்குப் பத்துப் பாசல் சோறுகட்டுங்கோ' எண்டு கேப்பாங்க. இயக்கம் எண்டு நினைச்சு அவசரமாச் சமைச்சுக் குடுத்த எத்தினையோ சனத்தைப் பிடிச்சுப் போட்டாங்க'' என்றும் அவர்கள் சொன்னார்கள்.

''எங்கட கெஷ்ரத்தை என்னெண்டு சொல்லிறது. நாங்க ஆமியால, ஈப்பியால, ரெலோவால எல்லாராலயும் நிறையக் கெஸ்ரங்களை அனுபவிச்சிட்டம். இனி நாங்க செத்தாலும் பெரவாயில்லை. எண்ட மகனை ஒரு தரம் பாத்தாப் போதும் எண்டு வந்துசேந்து போட்டன். இனித் திரும்பி அங்கே போனா என்ன நடக்குமோ தெரியாது. ஏனெண்டா நாங்கள் இருக்கிற சூழ்நிலை அப்பிடி. எங்கட புள்ளையளைப் பார்த்துவிட்டு வாறம் எண்டு ரெலோ குடும்பங்களுக்குத் தெரிஞ்சா அவ்வான் எண்டு தெரிஞ்சா அங்க இருக்கிற எண்ட குடும்பத்தை டயர் போட்டுபத்தவைப்பாங்க. எங்களுக்கு ஆமியவிட எங்கட இனமா இருந்து கொண்டே காட்டிக்குடுக்கிறவங்களாலைதான் பிரச்சினை. இப்பநான் இங்க நிக்கிறன். அங்க என்ன நடக்குதோ தெரியலை.''

என்று தன் துயரைக் கொட்டினார் ஒரு தாய்.

''எண்ட ரெண்டு புள்ளைங்களும் வீரச்சாவடைஞ்சிட்டாங்க. அவங்க ரெண்டு பேருந்தான் ஆம்புளைப் புள்ளைங்க மற்றதெல்லாம் பொம்புளைப் புள்ளைங்க. இஞ்ச இருக்கிற எண்ட அக்கா, எல்லாரையும் கூட்டிவந்து தன்னோடை இருக்கச் சொன்னா லங்களுக்கு இருக்கிறது மட்டக்களப்பில இருக்கிற ஒரே ஒரு ஊடுதான். அங்கையிருந்து வந்தா அந்த ஊடும்இல்லாமவுடும். எவ்வளவோ கெஸ்ரப்பட்டு அந்த ஊட்டைக் கட்டினம். எண்ட புள்ளைகளும் நானும் தெலையில கெல்லும்மண்ணும் தூக்கி சுமந்து கட்டின ஊடு. அதையும் விட்டுட்டுஇஞ்ச வந்து என்ன தொழில் செய்யிறது? எண்ட மூத்த மகளை வெளிநாட்டுக்கு அனுப்பக் கேட்டாங்க நான் வேணாம் எண்டு சொன்னன். அங்கை போய் ஆருக்கும் அடிபணிஞ்சு உழைக்க வேணுமோ? செத்தாலும் பெரவாயில்லை. இந்த நாட்டிலைதான் சாகவேணும். ஆருரையையும் நாட்டிலை சாகக்கூடாது''

என்று உறுதியுடன் சொன்னார் இன்னொரு தாய்.

துன்பங்கள் வந்தால் சோர்ந்து போவதுதானே சாதாரண மனிதர்களின் இயல்பு. இது என்ன இவர்கள் வீரமாய்,வேகமாய் பேசுகிறார்கள்:

அடிபட, அடிபட பணிவதற்குப் பதில் நிமிர்கிறார்கள்.

அடக்குமுறைப் பிடிக்குள்ளிருந்தவாறே தம் மனங்களில் ஆக்கிரமிப்பாளர்களுடன் போரிடுகின்றார்கள்.

இவர்கள் தமிழர்கள். அதனால் தான் இந்த வீரமும் வேகமும் இவர்களிடம் இருக்கிறது.



அண்மையில் மட்டக்களப்பிலிருந்து சில தமிழ்க் குடும்பங்கள் பிற மாவட்டங்களிலுள்ள தமது உறவினர்களைச் சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். சிறைக்கு வெளியே வந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் நிம்மதியோடும், திரும்பியும் மட்டக்களப்புக்குப் போகவேண்டுமே என்ற அச்சத்தோடும் நின்ற தாய்மார்கள் சிலரை நாம் சந்தித்தோம்.

''நாய் கொலைச்சா ஆமியின்ர நினைவுதான் வெருகுது. ஆமி 'ரவுண்டப்' பண்ணிறமாதிரிச் சத்தம் கேட்டுப் பெயந்துபோய் எழும்புவம். வாகனச் சத்தத்தைக்கேட்க பெச்சை உடுப்புகளைப் பாக்கவே பெயமாயிருக்கு. மெனசுக்குள்ளேயே உக்கிப் போறம். 'புள்ளை வீரச்சாவடைஞ்சிட்டுது' எண்டு அறிஞ்சாக்கூட எங்களாலை வாய்உட்டு குளற ஏலாது அறைக்குள்ளை கதவைச் சாத்திக் கொண்டு வாயை மூடிக் கொண்டுதான் கண்ணீர் உடவேணும். எங்கையாவது சண்டை நடக்கப்போகுது எண்டு ஆமி அறிஞ்சா ஒவ்வொரு ஊருக்கையும் ஒவ்வொரு சீ. ஐ. டீ நிற்பான். சண்டை நடக்கிற நேரம் யார் ஊட்டில குளறுறாங்க, ஏன் குளறுறாங்க எண்டு பாத்துப் பிடிச்சுக்கொண்டு போடுவாங்க. சாப்பாடு இல்லாட்டாலும் பெரவாயில்லை. நிம்மதியான வாழ்க்கை எங்களுக்குத் தேவை'' என்றார் ஒரு தாய்.

மட்டக்களப்பிலுள்ள தமிழர்கள் சுவாசிப்பதற்குக்கூட சிறீலங்கா இராணுவத்திடம் அனுமதிப் பத்திரம் வாங்கவேண்டும். இராணுவ விதிமுறைகளை மீறுகின்றவர் யாராக இருந்தாலும் எந்த வேறுபாடுமேயின்றி எல்லோருக்குமே மரண தண்டனைதான் வழங்கப்படும்.

எல்லாரும் தம் வீடுகளிலுள்ள உறுப்பினர்களின் விபரங்களை புகைப் படங்களுடன் அந்தப் பகுதியிலுள்ள இராணுவ நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும். புதிதாக யாராவது ஊருக்குள் வருவதானால், வெளியே போவதானால் ஏன் போகிறார்கள், வருகிறார்கள் என்றும் எத்தனை நாளில் திரும்புவார்கள் என்பதையும் பதிவு செய்து அவர்கள் தரும் அனுமதிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்த பின்னரே நகரலாம்.

சுற்றிவளைப்புகள், கைது செய்தலெல்லாம் அங்கு சொல்லிக் கொண்டு நடைபெறுவதில்லை. காலையில் எழுந்து பார்க்கும்போது வீதிகளில் இராணுவ நடமாட்டம் பரபரப்பாக

வில தான் எங்களைப் போக உடுவாங்க. அதுவெரைக்கும் சொல்லொண்ணாத அளவு சித்திரவதை நடக்கும்'' என்று சொன்னார் அந்தத் தாய்.

இராணுவத்தினரால் நம் தமிழீழப் பெண்கள் படும் அவலம் சொல்லமுடியாது.

''அம்மா, உங்களுக்குப் பொம்புள்ளைப் புள்ளை இரிக்கா?''

''ஓம் இரிக்கி''

''என்ன செய்றா''

''படிக்கிறா''

''உங்கட மகள எனக்குக் கெலியாணம் கட்டித் தாங்க. உங்கட ஆக்கள் எளலாம் இயக்கத்தில போய் செத்துப் போட்டாங்கள். இனி உங்கட மகளுக்கு நாந்தான் புருசன்.''

இவ்வாறு தனக்கும் ஒரு இராணுவத்தினனுக்கும் இடையில் நடந்த உரையாடலைக் குறிப்பிட்ட ஒரு தாய்,

''என்ன செய்யிறது? கேட்டுக் கொண்டு போறதைத்தவிர வேற வழியில்லை'' என்றார்.

தொடர்ந்து,

''இன்னொரு நாள் எல்லாரையும் வெரச் சொன்னாங்க. போனம். கூட்டம் வெச்சுச் சொன்னாங்க, 'ஆறு மணியான உடனை ஒருவீட்டிலையும் விளக்குப் பத்தக்கூடாது. நாங்க உண்மையான புலியைப் பிடிக்க வேணும். எங்களுக்கு ஏதும் நடந்தா, நீங்க ஒருத்தரும் இரிக்கமாட்டீங்க' எண்டு சொன்னாங்க.

அவன்ட கையில ஆயுதம் இல்லாட்டா நாங்க சேந்து அவனுகளைக் கெத்தியாலையாவது குத்திக்கொண்டிரிப்பன். என்ன செய்யிறது? அவண்ட கெயில ஆயுதம் இருக்கு அது எங்களை ஊமையா வைச்சிருக்கு. எங்களுக்கு ஒரு காலம்வெரும். அப்ப அவனைச் சும்மா உடமாட்டன்'' என்றார் ஆவேசத்துடன்.

''எங்கட இடத்துக்கு ஆமி ஒவ்வொரு நாளும் ஊடு ஊடாக, வெருவாங்க 'புலி வாறதா' எண்டு கேப்பாங்க. நாங்க 'இல்லை' எண்டாலும் அடிப்பாங்க. 'ஓம்' எண்டாலும் அடிப்பாங்க. நாங்க எதைச் சொல்லித் தப்புறது?.''



வளவுதான். உடன ஆமிக்குச் சொல்லிவிடுவாங்க. பிறகு நாங்க நிக்கிற இடமெல்லாம் நெருப்பாத்தான் எரியும். அப்படியான சூழ்நிலையிலைதான் நாங்க வாழுறம்.'' என்றார் ஒரு தாய்.

''எண்ட மகன் ஒருவனை இயக்கத்துக்கு உதவி செய்யிறவன் எண்டு ரெலோக் குடும்பங்கள் காட்டிக் குடுத்து, ஆமி சுட்டுப்போட்டான். எண்ட அடுத்த மகனையும் காட்டிக் குடுத்தாங்க, அவன் இயக்கத்தில சேந்திட்டான். அவனைப் பாக்கத்தான் வந்த

இவர்கள் கொஞ்சும் கிள்ளைத் தமிழில் பேசி, பாட்டெழுதி, கூத்து ஆடி தமிழையும் கலையையும் வளர்த்தவர்கள். அதனால் தான் இத்தனை பற்று இவர்களுக்கு.

நேற்று இவர்களின் மடிகளில் தவழ்ந்தவர்கள் இன்று எண்ணற்ற அளவில் போராளிகளாக மாறியிருக்கிறார்கள். மாறிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஓயமாட்டார்கள். தாயகம் விடியும்வரை தாமும் ஓயாமல், தம் குழந்தைகளின் வீரமும் மடியாமல் பார்த்துக்கொள்வார்கள்.

**கீத்தா**

---

''சொல் என் அருமை நிலமே,ஒரு தாய் தன் மகனை ஒரே தடவை, மின் வெட்டுப்போல மட்டுமே காண்பதற்கு ஒரு தாய் எந்தக் காலத்தில் இவ்வளவு துன்பம் உழன்று, இவ்வளவு தொல்லைப்பட்டிருக்கிறாள்? சொல்''

''எனக்குத் தெரியாது, தல்கோனை. உன் காலத்தில் நடந்தது போன்ற யுத்தம் உலகம் இதுவரை அறிந்திராத ஒன்று''

''மகனை இவ்வளவு பதைபதைப்புடன் எதிர்பார்த்த கடைசித்தாய் நானாகவே இருப்பேனாக. இரும்புத்தண்டவாளத்தைத் தழுவிக்கொண்டு குறுக்குக் கட்டைகளில் தலையை மோதிக்கொள்ளும் நிலைக்கு வேறு எவரையும் ஆண்டவன் ஆளாதிருப்பானாக.''

''பாவம் தல்கோனை. அந்த ஆண்டுகள்தான் உன்முடி நரைபோடத் தொடங்கிற்று. அதற்கு முன்பெல்லாம் உன்னுடைய பின்னல்கள் எவ்வளவு கனமாக, அடர்த்தியாக இருக்கும்... அப்போது முதல் நீ கடுகடுவென்று மௌனமாக இருக்கத் தொடங்கிவிட்டாய். பேசாமல் இங்கே வருவாய். பற்களை இறுகக் கடித்துக்கொண்டு போய்விடுவாய். ஆயினும் நான் புரிந்துகொண்டேன். தடவைக்குத் தடவை உன் நிலைமை முன்னிலும் அதிகக் கஷ்டமாகி வந்ததை உன் கண்களிலிருந்து கண்டுகொண்டேன்.''

நன்றி
அன்னை வயல்

## பெண்ணின் அறிவுசார் நிலைப்பாட்டின் முன்னேற்றமே

# பெண்ணின் நிலையை மாற்றும்



உமா

தமிழீழத்தின் குறிப்பிடத்தக்க பெண்ணியவாதிகளுள் ஒருவரும் ஈழத்தின் பிரபல நாளேடான ஈழநாதத்தின் முன்னாள் துணை ஆசிரியரும், தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுபவருமான உமா அவர்கள் எமது இதழுக்கெனச் சிறப்பாக வழங்கிய செவ்வியை இங்கே தருகிறோம்.

சுதாமதி

''குறிப்பிடக் கூடிய காலப்பகுதியில் தமிழீழத்தின் பிரபல பத்திரிகையான ஈழநாதத்தின் துணை ஆசிரியராகக் கடமையாற்றினீர்கள். பத்திரிகைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் சிலவற்றைக் குறிப்பிடுவீர்களா?''

''இந்திய அமைதிப்படை தமிழீழத்தில் இருந்து விலகிய காலத்தில் இருந்து, இரண்டாவது ஈழப்போர் தொடங்கி உச்சக்கட்டம் அடைந்தகாலம் வரையில் நான் ஈழநாதம் பத்திரிகைக் காரியாலயத்தில் கடமையாற்றினேன். இக்காலத்தில் நான் பெற்ற அனுபவங்கள் எனது வாழ்க்கை முழுமைக்கும் பயன்படுவதாய் அமைந்தன.

இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய காலப்பகுதியில் எண்ணிப் பார்க்கக்கூடிய அளவிலேதான் ஆசிரியப் பகுதி ஊழியர்கள் இருந்தோம். ஒரு பக்கம் விமானக் குண்டு வீச்சு. மறுபுறம் பலாலி, மண்டைதீவு, கோட்டை ஆகிய இடங்களில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைத்தாக்குதல். இவற்றுக்கு மத்தியில் நாம் உண்மைத் தகவல்களைத் திரட்டி மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய கடமையில் ஈடுபட்டிருந்தோம். எமது காரியாலயத்துக்கு அருகில்கூட குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன. ஆயினும், எமது காரியாலயத்தில் இருந்த அனைவரினதும் பங்களிப்போடு எம்மால் செய்திகளைத் திரட்டமுடிந்தது''.

''பத்திரிகைத்துறையில் கடமையாற்றியது உங்களை எந்தளவு தூரத்துக்கு வளர்த்துள்ளது?''

''சகல வழிகளிலும் பத்திரிகைத்துறை என்னை வளர்த்துள்ளது. மேற் குறிப்பிட்டவாறு எத்தகைய நிலையிலும் நிமிர்ந்து நிற்க, 'புயலிலும் எழுந்து நிற்கக்கூடிய' துணிவை இந்தப் பத்திரிகையில்கடமையாற்றியதன்மூலம் பெற்றுக்கொண்டேன்.''

''பத்திரிகைத்துறையில் எத்தகைய கருத்துக்களை வலியுறுத்த முயன்றீர்கள்?''

**தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதன்மூலம்தான் பெண் விடுதலையைப் பெறலாம் என்ற கருத்தைக் கொண்ட நான், இதனையே வலியுறுத்த விரும்பினேன். அத்துடன் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்ற நாடுகளில் போராட்டத்தின் வெற்றிக்கு பெண்களின் பங்களிப்பு எத்தகையவாறு இருந்தது என்பதைக் கூறுவதன் மூலம் எமது பெண்களையும் ஊக்குவிக்கலாம் என விரும்பினேன்.**

''தேசிய விடுதலையை முன்னெடுக்கும் வகையில் கருத்துக்களை வலியுறுத்த விரும்பினேன். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதன் மூலம்தான் பெண்விடுதலையை பெறலாம் என்ற கருத்தைக் கொண்ட நான், இதனையே வலியுறுத்த விரும்பினேன். அத்துடன் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்ற நாடுகளில் போராட்டத்தின் வெற்றிக்கு பெண்களின் பங்களிப்பு எத்தகையவாறு இருந்தது என்பதைக் கூறுவதன்மூலம் எமது பெண்களையும் ஊக்குவிக்கலாம் என விரும்பினேன். இது பத்திரிகைத்துறையில் கடமையாற்றும்போதே சாத்தியமாக இருந்தது.''

''நீங்கள் ஒரு பெண்ணியவாதி என்ற வகையிலும், பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற வகையிலும் பெண் விடுதலை பற்றிய உங்களது கருத்தை விளக்கமாகத் தருவீர்களா?''

''ஒரு பெண் தன் வாழ்க்கைக் காலத்தில் அடுத்தவர்களில் சார்ந்திராது, பொருளாதார ரீதியாகத் தன்னை நிலைப்படுத்திக்கொள்வது பெண் விடுதலைக்குரிய ஆரம்பப்படியாக அமையும். பொருளாதார ரீதியில் தன்னில் தங்கியிருக்கும் உறுதிப்பாடு தோற்றம் பெற்ற பின்னர், பெண்ணடிமை சார்ந்த செயற்பாடுகள் தன்னிச்சையாகவே விடுபடத் தொடங்கும் என நான் கருதுகிறேன். பெண்ணில் ஏற்படும் அறிவுரீதியான மாற்றம்தான் பொருளாதார விடுதலைக்கு வழிகோலும். அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வகையில் பெண் வாழும் சூழல் அமைவதன் மூலமே அறிவுசார் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். சூழல்கூட, அறிவைப் போற்றி அதைப் பெண்ணுக்கு ஊக்குவிப்பதற்குச் சமூகமாற்றத்தை வேண்டிநிற்கின்றது. ஒரு பெண் தனித்துநின்று சமூகத்தை மாற்றுவது எளிதானதன்று. அதேபோன்று சமூக மாற்றம் நடைபெறும்வரையும் பெண் காத்துநிற்பதும் சாத்தியம் இல்லை. எனவே பெண்விடுதலை என்பது ஒன்றுடன் ஒன்று இணைந்த அதே நேரம், ஒன்றில் இருந்து இன்னொன்று விடுபடமுடியாதது. இது ஒரு வட்டச் செயல்முறையிலேயே தங்கியுள்ளது. இந்த வட்டச் செயல்முறையில் பெண்விடுதலைக்கு பெண்ணில் ஏற்படும் மாற்றம் மட்டுமன்றி ஆணின் மாற்றமும் வேண்டப்படுகின்றது.

பெண்ணின் உடலை நாடும் நிலை, பெண்ணை ஏனைய சொத்துக்களைப் போன்று வீட்டுக்குள் பத்திரமாகப் பூட்டிவைத்துப் பாதுகாக்கும் நிலைக்கே வழிகோலுகின்றது. இது பெண்ணடிமையின் பிறப்புக்கே வித்திடுகின்றது. பெண்ணின் உடலுடன் உள்ளத்தையும் நாடும் நிலையில், வீட்டின் மூலையில் மட்டும் பெண்ணைத் தேடாமல், அவளை ஒரு துணையாக நண்பனாக, ஆசானாகப் போற்றும் நிலையில் அங்கு பெண்ணுரிமையும், பெண்ணின் மதிப்பும் இயல்பாகத் தோற்றம்பெறுவதைக் காணலாம். பெண்ணின் உடல் மட்டும் ஏற்படுத்தும் கவர்ச்சி பெண்களைச் 'சிறைகாக்கும் காவலுக்கு' உட்படுத்துகின்றது. அடிமை விலங்காக நின்று அவர்களை ஆண்களுக்கு அடிமைப்படுத்துகின்றது. பெண் உள்ளத்தின் கவர்ச்சியோ, பெண்களுக்கு உரிமை வழங்குகின்றது. இதைத்தான் வள்ளுவர் அன்றே சொல்லியிருக்கின்றார். 'சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை' எனவே பெண் அறிவு ரீதியாக மாற்றம் பெறும் அதே நேரம், தனது அகத் தோற்றத்தைச் சீரமைப்பதுபோல், புறத்தோற்றத்திலும் கவனம் செலுத்தி, கவர்ச்சிப் பொருளாக ஆண்களால் ஈர்க்கப்படாவண்ணம் சீரமைப்பதனூடாக, உள்ளக்கவர்ச்சியை ஆண்கள்பால் தூண்டுவதனூடாகத் தமது உரிமையை இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.''

**ஒரு பெண் தன் வாழ்க்கைக் காலத்தில் அடுத்தவர்களில் சார்ந்திராது, பொருளாதார ரீதியாகத் தன்னை நிலைப்படுத்திக்கொள்வது பெண் விடுதலைக்குரிய ஆரம்பப்படியாக அமையும். பொருளாதாரரீதியில் தன்னில் தங்கியிருக்கும் உறுதிப்பாடு தோற்றம் பெற்ற பின்னர், பெண்ணடிமை சார்ந்த செயற்பாடுகள் தன்னிச்சையாகவே விடுபடத் தொடங்கும் என நான் கருதுகின்றேன். பெண்ணில் ஏற்படும் அறிவு ரீதியான மாற்றம்தான் பொருளாதார விடுதலைக்கு வழிகோலும்.**

''நீங்கள் ஒரு பெண்ணியவாதி என்றவகையில் உங்களது பெண்ணியக் கருத்துக்கள் உங்களை எந்தவகையில் விமர்சித்துள்ளன?''

''பெண்ணியம் என்றபதம் குறிக்கும் வரைவிலக்கணம் பலதரப்பட்ட அணுகு முறைகளைக் கொண்டது. ஒன்று பெண்களின் உரிமையை வலியுறுத்துகின்றது. மற்றொன்று பாலியல் ரீதியிலான சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. வேறொன்று சமூகத்தில் பெண்ணின் அந்தஸ்துடன் சம்பந்தப்பட்டது. குழந்தை வேண்டாம், கட்டுப்பாடற்ற காதல், நிபந்தனையற்ற விவாகரத்து போன்ற ஒழுக்கச்சிதைவு, ஆக்கக்கேடான கோட்பாடுகளிலிருந்து விலகி சமூகத்தில் பெண்களின் அந்தஸ்தை, மதிப்பை மாற்றுவதற்குரிய வரைவிலக்கணத்தால் நான் ஈர்க்கப்பட்டுள்ளேன். பாலியல் அணுகுமுறையிலிருந்து வேறுபட்டு. பெண்ணின் அறிவு சார் நிலைப்பாட்டில் மட்டும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதனூடாகவே பெண்ணின் நிலையை மாற்றலாம் என்ற கருத்தில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன். இந்த அறிவுசார் மாற்றமும்கூட மேற்கத்தேசப் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களின் செல்வாக்குக்குஉட்படுத்தப்படாது, எமது பண்பாடு, பாரம்பரியத்தினூடாக எமது பழைய இலக்கியங்களினூடாக நாம் அறிந்துகொண்ட பெண்ணுக்குரிய மதிப்பை சமூகத்துக்கு தெரியப்படுத்தும் விதத்தில் இருக்கவேண்டும் என விரும்புகின்றேன். பெண்ணின்வெளித் தோற்றம், உடை அணியும் முறை, பார்வை, நடை, பாலியல் சார்ந்த நடவடிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பெண்ணியத்தைப் பார்க்காமல், எமது பண்பாட்டினூடாக அறிவுசார் மாற்றத்துக்கு ஏற்ப எனது கருத்துக்கள் அமைவதனால், பொதுவாக எனது கருத்துக்கள் பெண்ணியவாதிகளினால் விமர்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை என்றே கருதுகின்றேன்'';

**பாலியல் அணுகுமுறையிலிருந்து வேறுபட்டு பெண்ணின் அறிவுசார் நிலைப்பாட்டில்மட்டும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதனூடாகவே பெண்ணின் நிலையை மாற்றலாம் என்ற கருத்தில் நான் மிகவும் உறுதியாக இருக்கிறேன். இந்த அறிவுசார் மாற்றமும்கூட மேற்கத்தேசப் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களின் செல்வாக்குக்கு உட்படுத்தப்படாது, எமது பண்பாடு, பாரம்பரியத்தினூடாக எமது பழைய இலக்கியங்களினூடாக நாம் அறிந்து கொண்ட பெண்ணுக்குரிய மதிப்பை சமூகத்துக்கு தெரியப்படுத்தும் விதத்தில் இருக்கவேண்டும் என விரும்புகின்றேன்.**

''பெண் கல்வியே பெண்களின் முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்ற அடிப்படையான கருத்து உங்கள் வாழ்க்கையைப் பொறுத்தளவில் எந்தளவு தூரம் ஏற்புடையது?''

''பெண்கல்வியே பெண்களின் முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்ற அடிப்படைக் கருத்தில் நான் உறுதியாக உள்ளேன். பல சிரமங்களுக்கு மத்தியில்தான் நான் படித்து வந்தேன். ஆனால் எனது பெற்றோர்கள், நான் படிப்பதற்கான சூழலை உருவாக்கியதனாலும்எனதுசகோதரர்களின் ஊக்கத்தினாலும் பெரிதும் படித்தேன். படிக்க வேண்டும் என்ற ஓர்மம் என்னுள் ஏற்படுவதற்குச் சுயசிந்தனையைத் தூண்டக்கூடிய வகையில் எனது சூழலும் எனது வளர்ப்பு முறையும் காரணமாக அமைந்தன. இது எனது பாதையை நானே தெரிந்தெடுக்கக்கூடிய வகையிலான ஆளுமையை எனக்குத் தந்தது. சமூகத்துக்கும், சமூக மாற்றத்துக்கும் தேவைப்படும் சிந்தனையைத் தூண்டக்கூடிய தேவை எது என்பதைஉணரவைத்தது. மேலும் இத்தகையதொரு தெளிந்த நோக்குத்தான், எமது சமூகம் விரும்புகின்ற, எதிர்பார்க்கின்ற, கனவு காண்கின்ற மிக உயர்வான ஒரு வாழ்க்கையை வெளிநாடு ஒன்றில் அமைத்துக் கொள்வதற்காக வந்த வாய்ப்பையும் உதறிவிட்டு போர்க்கால சூழலிலும் தாயக மண்ணில் வாழவேண்டும் என்ற மனோதிடத்தை எனக்கு அளித்தது. ஒரு ஆணைப் படிப்பிப்பதன்மூலம் ஒரு நபருக்கு அறிவூட்டலாம்; ஒரு பெண்ணைப் படிப்பிப்பதன் மூலமோ ஒரு குடும்பத்துக்கே அறிவூட்டலாம்' என்ற கருத்து பெண் கல்வியின் அவசியத்தை மேலும் உணர்த்துகின்றது. ஆகவே பெண் கல்வியே பெண்களின் முன்னேற்றத்துக்கு வழிகோலும் என்ற கருத்தை நான் பெருமளவுக்கு ஏற்றுக்கொள்கின்றேன்''

''தற்போதைய சூழ்நிலையில் பெண்களின் முன்னேற்றம் பற்றிய உங்களது கருத்து?''

''இன்றைய எமது விடுதலைப் போராட்டத்தில் சம

(11-ம் பக்கம் பார்க்க)




"தோழி! உன்னைப்பற்றி வரலாறு எழுதும்படி நீ துளசிராவிடம் கூறினாய். ஆனால், இன்று துளசிராவுக்கே நாம் வரலாறு எழுதுகின்றோம். இதுதான் எமது போராட்டம். விடியும்வரை இது தொடரும்."

1991ன் நடுப்பகுதி, பொன்னும் மணியும் கொழிக்கும் பூநகரி மண் சிங்கள அரசின் கூலிப்படைகளினால் முற்றுகைக்குள்ளாக்கப்படுகிறது. நாகதேவன்துறை ஒரு கூட்டுப்படைத் தளமாக அமைக்கப்படுகின்றது. ஈராண்டு காலம் பூநகரி மண்ணையும் கிளாலிக்கடலையும் ஆட்சி புரிந்த கூலிப்படைகளின் உயிர்கள், ஈராண்டு காலம் முடிவதற்குள் அவர்களை விட்டுச் சென்றுவிட்டது.

அன்று எத்தனையோ அப்பாவி மக்களை கடலிலே வெட்டியும் சுட்டும் கொன்றொழித்த அரக்கர்படை எம் மண்ணிலே, மண்ணோடு மண்ணாய் சங்கமம் ஆகிவிட்டது.

கிளாலிக் கடல் எங்கும் அந்திவானத்தின் ஒளிக்கீற்றுப் படும்போது இரத்தாறு பாய்வது போன்ற காட்சி. அன்று எம் மக்கள் மீது "நாம் அப்பாவி மக்கள்" என்று கூறிய போதும், இனவெறி பிடித்த அரக்கர் படை செய்த அட்டூழியங்கள் கண்முன்னே நிழலாய்த் தெரிகிறது.

இவற்றையெல்லாம் நினைக்கும்போது நெஞ்சு எரிமலையாய் வெடித்துவிடும் போன்று கொதிக்கின்றது.

எங்கிருந்தோ வந்த சில்லென்ற குளிர் காற்றுடன், "நாகதேவன்துறை வேகப்படகுகள் நம் கையில் வீழ்ந்ததடா" என்ற பாடல் என்னைச் சுய உணர்வுக்குக் கொண்டு வந்தது.

இப்பாடலைக் கேட்கும்போது இவ் வெற்றிக்குக் காரணகர்த்தாக்களான நானூற்று ஐம்பத்தெட்டு வீர மறவர்களின் வீரம் செறிந்த இலட்சியமும், தலைவனின் பாதையிலே தளராது போரிட்டு வீரகாவியம் படைத்த வீரச் செம்மல்களின் திருமுகங்களும் எம் கண்முன்னே நிழலாடுகின்றன.

*1993-11-11* அன்று புலர்கின்ற காலைப் பொழுதினிலே ஓர் செய்தி "மகிழினி பூநகரிச் சமரில் மாவீரர் வரிசையிலே ஒருத்தி ஆகிவிட்டாளாம்."

மகிழினி! நானூற்று ஐம்பத்தெட்டுத் தியாகிகளில் நீயும் ஒருத்தி என்ற செய்தி என்னை உலுக்கத்தான் செய்தது. எம்முடன் ஈராண்டு காலம் உண்டு, உறங்கி, உலாவித் திரிந்த அவள் இனி வரப்போவதில்லை.

உன் வீரவதனம் என் கண்முன்னே நிழலுருவமாய் தெரிகிறது. பூநகரி மண்ணை மீட்போம் என்ற மன உறுதியுடன் எதிரியின் பாசறைக்குள் வழிகாட்டியாக நீ சென்று வீரச் செயல் புரிந்திட்ட கதைகேட்டு எம் நெஞ்சம் விம்மிப்புடைக்கின்றது.

10ஆந் திகதி தாக்குதலுக்கான நாள். எம் பிரிவில் அனைவரது முகங்களிலும் ஏதோ ஒரு வித அமைதி குடிகொண்டிருந்தது. மதியச்சாப்பாட்டுக்குப் பின் நாம் அனைவரும் ஒன்றுகூடி இருக்கும் போது, ஒவ்வொருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் ஏதோ புதியவர்களைப் பார்ப்பவர்களைப் போன்று பார்க்கிறார்கள்.

மகிழினி திடீரென்று "என்னை எல்லோரும் வடிவாய்ப்பாருங்கோ! ஏனென்டா நான் இந்தச் சண்டையில் மண்டையைப் போட்டுவிடுவன். நான் இந்தச் சண்டையில் வீரச்சாவு அடைந்தால் உயிருடன் திரும்பி வாற ஆக்கள் எனக்கு வரலாறு எழுதுங்கோ" என்றாள். அப்போது துளசிரா, மகிழினியைப் பார்த்து. "நான் நிச்சயம் உயிருடன் திரும்பி வருவன். நான் உனக்கு வரலாறு எழுதுகிறன். நீ கவலைப்படாதே" என்றாள்.

அப்போது, ஒரு தோழியைப் பார்த்து மகிழினி, "ஒவ்வொருவரும் உங்களுக்கு விருப்பமான பாட்டுகளை இப்ப பாடவேணும்" என்று கூறினாள். அப்போது துளசிரா "மகிழினி, உனக்கு விருப்பமான பாட்டை முதலிலே பாடு. பிறகு ஒவ்வொருதரும் படிக்கிறம்" என்றாள்.

மகிழினி மறுப்பு எதுவும் கூறாமல் "ஆராரோ பாடவந்தேனே. ஆவாரம் பூவின் செந்தேனே" என்ற பாடலைப் பாடினாள். முன்னர் என்றால், அவளுடைய குரலைக் கேட்டு எல்லோரும் சிரித்து இருப்போம். ஏனென்றால் சுருதி கூடிய பாடல்களை எல்லாம் அவளால் பாட முடிவதில்லை. அடித்தொண்டையால் பாடும்போது கிணற்றுக்குள் இருந்து படிப்பது போன்றிருக்கும்.

"நீங்கள் எல்லாரும் நான் வீரச்சா அடைந்தால் எங்கள் வீட்டுக்குப் போங்கோ. என்ர அம்மாவுக்கும், அம்மம்மாவுக்கும் ஆறுதல் சொல்லுங்கோ. அம்மம்மா தான் என்னில நிறையப் பாசம். அவதான் நான் வீரச்சாவடைஞ்சா தாங்கிக்கொள்ளமாட்டா" என்றாள்.

மன்னார் மாவட்டத்தில் பனங்கட்டிக்கொட்டு என்னும் கிராமத்தில் அருள்வாசகம் தம்பதிகளின் மூன்றாவது புத்திரியாகப் பிறந்தாள் மகிழினி. இவளுக்கு இரண்டு அண்ணன்மாரும் ஒரு தம்பியும் ஒரு தங்கையும் உண்டு. அவர்களில் இவளுடைய இரண்டாவது அண்ணன் இயக்கத்தில் இணைந்துகொண்டார். இவள் தன் அம்மம்மாவுடன் வளர்ந்து வரலானாள். தந்தை சுகவீனமுற்று இறந்த பின் *1990*இன் நடுப்பகுதியில் இயக்கத்தில் தன்னை முற்று முழுதாக இணைத்துக் கொண்டாள். மணலாற்றுக் காட்டில் பத்தாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சி எடுத்தாள். பயிற்சிப் பாசறையில் மிகவும் திறமையுடன் செயற்பட்டு சக தோழிகளின் மனதை கவர்ந்தாள்.

## லெப். மகிழினி



**சகாயபாமா அருள்வாசகம்**

செபஸ்தியார் கோயிலடி, மன்னார்.

பிறப்பு: 1974-04-30

இறப்பு: 1993-11-11

பயிற்சி முடித்து வெளியே வந்த பின் கோட்டை முகாம் தகர்ப்பில் பங்கு கொண்டு திறம்படச் செயற்பட்டாள். பின்பு பலாலியில் கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்காப் படைகளின் காவலரண்களையும் இராணுவத்தின் செயற்பாடுகளையும் அவதானிக்கும் முகமாக மகளிர் படைப்பிரிவிலிருந்து ஒரு பிரிவு அனுப்பப்பட்டது. அதில் அவளும் ஒருத்தியாகப் போனாள்.

ஆகாய, கடல், வெளிச்சமரிலும் திறம்படச் செயற்பட்டு, எல்லோராலும் திறமையாகப் பேசப்பட்டாள்.

*1991*இன் நடுப்பகுதியிலே அவள் எங்கள் பிரிவில் இணைக்கப்பட்டாள். அதன் பின்பே அவளின் குணங்கள் எனக்கு முற்றுமுழுதாகத் தெரிய வந்தது.

அவளை எல்லோரும் "பவள்" என்றும், "செயின் புளொக்" என்றும் செல்லமாக அழைப்பார்கள். அவளின் தோற்றமும் நடையும் பார்ப்போர் எல்லோரையும் சிரிப்புக்குள்ளாக்கும். யாராவது வேண்டுமென்றே 'பவள்' என்று கூப்பிட்டால், ஒன்றும் கூறாது சிரித்துவிட்டுச் சென்று விடுவாள்.

எங்கள் முகாமில் எங்களுக்குக் கடுமையான பயிற்சி தரப்பட்டது. இவளுக்கு மழைக் காலங்களிலும், குளிர் காலங்களிலும் இழுப்பு வருவதுண்டு. அதனை அறிந்த பொறுப்பாளர் அவளை "நீ இனி பயிற்சிக்கு வர வேண்டாம்" எனக் கூறியபோதும், அவள் கேட்கமாட்டாள். "பயிற்சி எடுத்தால் வேளைக்கு இழுப்பு மாறிவிடும்" என்று கூறுவாள்.

ஒரு நாள் நான் மகிழினியைப் பார்த்து, "உன் அண்ணன் இயக்கத்திலையிருந்து விலத்திவிட்டாராம்" எனக் கூறினேன். தமையன் விலகிய செய்தியைக் கேட்டவள், "நான் இனி அண்ணனுடன் கதைக்க மாட்டன்" எனக் கூறினாள். "ஏன்?" என்று கேட்டதற்கு, "நினைச்ச நேரம் இயக்கத்துக்கு வாறதுக்கும் நினைச்ச நேரம் விலகுறதுக்கும் இயக்கத்தை என்னெண்டு நினைச்சார்" எனக் கூறியவளின் பார்வையிலே அவளின் மனவுறுதியையும், இயக்கத்தில் அவள் கொண்டுள்ள விசுவாசத்தையும் எல்லோரும் புரிந்துகொண்டோம்.

எங்கள் முகாமில் மகிழினியின் சமையல் முறை என்றால் எல்லோருக்கும் சந்தோசம், காரணம் அவள் தேநீர் தயாரித்தால் நாங்கள் எல்லோரும் இரண்டு கோப்பை தேநீர் குடிப்போம். அவ்வளவு சுவையாக இருக்கும். நாங்கள் சமைக்கும் போது கறிக்கு உப்பு பார்ப்பது, புளி விடுவது எல்லாம் அவள்தான். அத்துடன் எமக்கு ஏதாவது நல்ல சாப்பாடுகள் வந்தால், அதை எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டு, பகிர்ந்து கொடுப்பதற்கு நிகர் அவளே தான். தான் உண்ணாவிட்டாலும் மற்றவர்களுக்கு உண்ணக் கிடைக்க வேண்டும் என்ற மனம் படைத்தவள் மகிழினி.

ஒருமுறை, எங்கள் பிரிவைப் பதுங்கு குழி வெட்டும்படி கூறினார்கள். அப்போது "நான் சைற் எடுக்கிறன்" என்று கூறி மிகவும் நன்றாக, சுத்தமாக கோடரியால் பக்கத்தை எடுத்தாள். எந்தவொரு வேலையையும் கடமை உணர்வோடு மிகவும் சுத்தமாகச் செய்ய வேண்டும் என நினைப்பவள் மகிழினி. பத்து அடி ஆழம்வரை பதுங்கு குழி வெட்டி விட்டோம். எங்கள் பொறுப்பாளர் இன்னும் இரண்டு அடி கூட வெட்டும்படி கூறினார். அப்போது மகிழினி "நான் இனிக் கீழ இறங்க மாட்டன். மேலே நிண்டு மண் இழுக்கிறன்" என்று கூறியவள், திடீரென்று பதுங்கு குழிக்குள் விழுந்துவிட்டாள். விழுந்தவள் ஏற முடியாமல் தத்தளித்த காட்சியை இன்று நினைத்தாலும் சிரிப்பாய் வருகிறது.

எங்கள் பிள்ளைகளில் யாராவது ஒரு பிள்ளைக்கு சுகவீனமென்றால், ஒரு தாயின் உணர்வோடு இரவு பகலென்று சிரமத்தைப் பாராது மருந்துகள் கொடுப்பதில் இருந்து, உணவு கொடுத்து உடை துவைத்துக் கொடுப்பதுவரை மனச்சலிப்பின்றி செய்து முடிப்பாள்.

எங்கள் முகாமில் ஓர் நாள் ஒரு தோழியின் பிறந்தநாள். நாமெல்லோரும் குழுமி இருந்தோம். அப்போது பொறுப்பாளர் வந்து "மகிழினியைக் காணவில்லை. எங்கே?" என்று கேட்டார். வெளியிலிருந்து, "இங்கே நிற்கிறேன்" என்ற குரலைக் கேட்டு எல்லோரும் திரும்பிப் பார்த்தோம். துப்பாக்கியுடனும் மேலதிக ரவைக்கூடுகள் வைக்கும் உறையுடனும் நின்ற அவளைப் பார்த்த அனைவருககும் அவளின் கடமை உணர்வினை நினைக்க நெஞ்சம் புல்லரித்தது. நாமோ, "இந்த இடத்தில் ஆமி வருவானோ?" என்ற அசட்டுத் துணிவுடன் இருந்தோம்.

## கிருஷ்ணா

அவள் கூறினாள்,

"எதிரி என்பவன் எப்போதும் எந்தக் கணமும் எங்களைத் தாக்கி அழிக்கலாம். நாம் பகல்இரவென்றுஅசட்டையாகஇருக்கக்கூடாது. அது எமக்குஅழிவையேஏற்படுத்தும்" எனச் சிறு பிரசங்கமே செய்தாள்.

பாடசாலையில் நான்காம் வகுப்புவரை கல்வி பயின்ற இவள் எமது பிரிவுக்கு வந்து புத்தகங்கள் படிப்பதிலும், செய்தித்தாள்கள் படிப்பதிலும்தான் தன் உலக அனுபவங்களை வளர்த்துக்கொண்டாள். இவளிடம் ஒரு சிறப்புத் தன்மை என்னவெனில், ஏதாவதொரு புத்தகத்தைப் படித்தால், அதை அப்படியே ஒரு வரியும் விடாமல் ஒப்புவிப்பாள்.

தோழி! உன்னைப்பற்றி வரலாறு எழுதும்படி நீ துளசிராவிடம் கூறினாய். ஆனால், இன்று துளசிராவுக்கே நாம் வரலாறு எழுதுகின்றோம். இதுதான் எமது போராட்டம். விடியும் வரை இது தொடரும்.

# எது எனக்கு மகிழ்ச்சியைத் தரும்?

புனிதமான
விடுதலை அமைப்பில்
இணைந்து
ஆண்டுகள் எட்டு
பூர்த்தியாகி விட்டன.
நான்கு ஆண்டுகள்
கானகப் போராட்ட
வாழ்க்கையைக்
கற்றுக் கொண்டேன்.
இதில்
திட்டமிட்ட நாட்களில்
எதிரியோடு போய்
மோதுவோம்.
எதிரியைப் புற முதுகு
காட்டி ஓடவிட்டுவிட்டு,
அவனது
ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொண்டு
கானகத்திலுள்ள எங்கள்
பாசறை வருவோம்.
நாம்
சோர்வின்றி, தளர்வின்றி
தொடர்ந்தும் களமாட
எமக்கு உணவு
தேவை.
ஆகையால்
பாசறையில் உணவை
சேகரித்து வைப்பதற்காய்
நாளெல்லாம்
உணவுப் பொதிகளை
சுமப்போம்.
தலையில்
பொதிகள் இருக்கும்.
கழுத்து அடைக்கும்.
ஆனாலும்
பொதிகளைக் கீழே
போடமாட்டோம்.

பதிலாக
கானகத்திலுள்ள
மரங்களை நட்போடு
நான்
பார்ப்பேன்.
ஒற்றையடிப் பாதையில்
போய்க்கொண்டிருக்கும்போது,
பிடித்து இழுக்கின்ற
முட்செடிகளைப் பார்த்து
நட்புரிமையோடு
சிரித்து விட்டு,
அவைகளிடமிருந்துவிடுபட்டுக்கொண்டு
இலை மறைவிலிருந்து
இனிய கீதமிசைக்கும்
பறவைகளுக்கு
நன்றி சொல்ல
அவைகளைத் தேடிக்கொண்டே
பாசறை போய்ச் சேருவேன்.

அன்றிருந்த
சந்தோசம்
இன்று எனக்கில்லை.
ஏன் தெரியுமா?
அன்று
சோகமற்ற
பறவையினங்களையும்
விலங்கினங்களையும்
கண்டேன்.
இன்று
சோகத்தையே சொந்தமாக்கி
திரியும்
மனிதரைமட்டுமே காண்கின்றேன்.

கொடியவர்களின் கைகளில்
அகப்பட்டு
உடமைகளை இழந்து,
காயங்களோடு
புகலிடம் தேடும்
மனிதர்களை,
ஒரு வாய் சோற்றுக்கு
மாடாய் உழைக்கும்
மனிதர்களை,
வீதிகளில் மூட்டைகளுடனும்
விறகுச் சுமையுடனும்
உடல் நரம்புகள்
'தெறிக்கிறேன், தெறிக்கிறேன்'
என்று சொல்லவும்
மிதிவண்டியை
பலம் கொண்டு
மிதித்துச் செல்கின்ற
எனதருமைத் தமிழர்களைத்தான்
நான் பார்க்கின்றேன்.
இந்த
மக்களுக்கு
ஒரு விடிவு வரும்வரை
என்னால் சந்தோசமாக
இருக்கவே முடியாது.
எப்படி முடியும்?

பறவையினங்களுக்கும்
விலங்கினங்களுக்கும்
இருக்கின்ற சந்தோசம்
என் மக்களுக்கு
இல்லையே!
யாரும் அறியாமல்
கண்ணீர் சிந்துகிறேன்.
வீதியால்
துயரத்தைச் சுமந்துகொண்டு
போகின்ற ஒவ்வொரு
மனிதரையும்
என் அப்பா, அம்மா,
உடன் பிறப்புகளாக
எண்ணி வெதும்புகின்றேன்.
என்னருமை
உடன் பிறப்புகளுக்கு
ஒரு விடிவு காலத்தை
தேடிக் கொடுக்கும்வரை,
என் கைகளும் கால்களும்
ஓயப் போவதில்லை.
என்னருமைத் தமிழர்கள்
படும் அவலங்களையும்
துயரங்களையும் துன்பங்களையும்
பார்த்து என்னால் கைகட்டிக்கொண்டு
இருக்கவே முடியாது.
எட்டு ஆண்டுகள் என்ன,
எண்பது ஆண்டுகள்
சென்றாலும்
என் மக்களுக்காகவும்
தமிழீழத்துக்காகவும்
உயிருள்ளவரை
கடுமையாக
உழைப்பேன்.
மண்ணின், மக்களின்
சந்தோசமே
என் சந்தோசம்.

ரதி

## மாவீரரே

ஓ
என் தோழிகளே!
இருள் சூழ்ந்த எங்கள் இருப்பிடங்களில்
உங்கள் ஒளிவீச்சு
பட்டுத்தெறித்து
எங்களைப் பிரகாசப் பிரதேசத்துக்குள்
தள்ளிக்கொண்டிருக்கிறது.
அந்த ஒளியில் நாங்கள்
உலாவுவது
உங்களுக்குத் தெரியும் என நினைக்கிறேன்

வேங்கைகளே,
வெறும் வெற்றிடமாய்
உங்களை நாம் நினைக்கவில்லை.
வேர் நிறைந்த மரம் ஒன்றின்
விழுதுகளாய்,
அடிமனதில் உதிக்கும் சூரியர்களாய்
வரலாற்று வாசகத்தில்
வரிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

காலத்தைக் காட்டிநிற்கும்
வெறும் கட்டிடம் அல்ல
நீங்கள்.
சுழலுகின்ற வரலாற்றுச் சக்கரத்தில்
வடிவமைக்கப்பட்ட காவியக் கல்லறைகள்;
ஆழமாய் அமைக்கப்பட்ட
அத்திவாரத்துள்
அமர்த்தப்பட்ட அடிக்கற்கள்.

சுதந்திர ஈழம்
எங்களை
வந்து சேருமாயின்,
விடுதலைக் காலம்
எங்களுக்கு
விடை கூறுமாயின்
அவையெல்லாம் உங்கள்
சாதனையின் சாம்ராஜ்யங்கள்தான்.

மிருணா

## ஒய்வு

பாதை வெகு தூரமானது.
எனினும்
பயணம் செய்கின்றோம்.
பாதையில் வளைவுகளை - இல்லை
காட்டாறுகளை
கடக்கவேண்டியிருந்தது.
கடந்தோம்.
தீக் கங்குகளை
சுமக்க வேண்டியிருந்தது.
சுமந்தோம்.
கால்கள் சேற்றினுள்
புதைந்து மேலெழும்.
சேற்றின் நிறம் சிவப்பு.
இருந்தாற்போல சில
மேடுகளும் தட்டும்.
குனிந்து பார்த்து
ஓடிக் கடப்போம் - அவை
எமது தோழர்களின்
புதை குழிகள்.
வானை முட்டும்
வெற்றிச் சங்கின் ஓசை
காதை நிறைப்பதை
உணர்ந்து கொள்கிறோம்.
ஆயினும்
பயணம் முடியும் நேரம்
பாதையின் நீளம் குறுகி வருகிறது.
நாங்கள் களைத்துவிட்டோம்.
எனினும்
ஓய்வெடுக்கப் போவதில்லை.
ஓய்வுக்கென்றொரு
சந்ததி உண்டு.
அவர்களின் ஓய்வுக்காய்
நாங்கள் உழைப்போம்.

தமிழ்க்கவி

## எல்லைகள் நோக்கி

ஆதிக்கக் கரங்களால் பூமி சிதைந்தது.
அந்நிய ஆதிக்கம் ஈழத்தைத் தின்றது.
நம்பியோர் நெஞ்சங்கள் நெருப்பினில் வெந்தது.
நாளும் எம் தாயகம் நம்மை விட்டகன்றது.

வடக்கு கிழக்கின் வரலாறு பிரிந்தது.
வரலாறு, 'தமிழீழம் அந்நியனின்' என்றானது.
வந்தேறு குடிகளால் வரலாறு பிறழ்ந்தது.
வளமான தாய் நாடு பூகம்பம் ஆனது.

பொங்கும் தமிழினம் எரிமலை ஆனது.
புதியதோர் புலியினம் இங்கு உருவானத.
இளைய தலைமுறை இரந்து இனிக் கேட்காது.
இம்சையால் எம் இதயம் என்றும் உருகாது.

குண்டு மழையால் எம் குருதி சிந்தலாம்.
குவலயம் திரண்டுமே நீதி கேட்கலாம்;
அன்னையின் இரத்தம் ஆறாய் பாயலாம்,
ஆருயிர் நண்பர் கண்முன் மடியலாம்.

சோகத்தால் துப்பாக்கி சோர்ந்து போகுமோ!
சோதனையால் விடுதலைப்பயிர் வாடி வீழுமோ?-இல்லை
எதிரியின் பாசறையை எரித்திட விரைவோம்.
எரிமலையாய் எம் தேசமும் பொங்கும்.

தேசத்தின் வதைமுகாம் சிதைந்துமே மடியும்.
சிங்கள ஆதிக்கம் சிதறியே ஓடும்.
எங்களின் தேச எல்லைகள் நோக்கி
புலிமற வீரரின் பாதங்கள் விரையும்.

அன்பரசி

## ஏக்கம்

புலிப் பெண்ணே,
எம் தாயகத்தின்
ஒரு பிடி மண்ணும்
உனக்காக ஏங்குகிறது.
ஏனெனில்
உன் பாதங்கள்
படும்போதுமட்டுமே
குளிர்கின்றது அவள் மேனி.
பண்பாடு இல்லாத
பாதகர்களின் சுவடுபட்டு
அனலாகும்போது
அவள்,
'என் மகளின்
பாதம்பட்டு
நான்
குளிரேனோ?'
என்று
ஏக்கங்கொள்கிறாள்.

பிலோமினா

## மேலுமொரு பொருளுமுண்டோ?

மொட்டுகள் விரிவதும் - பின்
சட்டென்று உதிர்வதும்
பழைய கதை
எம் தமிழீழமதில்.

பால் மணம் மாறாப் பாலகர்
பசி, தூக்கம் மறந்து
பாச உறவிழந்து
களமாடி விளையாடும்
காட்சிதனைப் பாராத கண்ணிருந்தும்
என்ன பயன்?

சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காய்
சுவாசிக்கவே மறந்த
சுதந்திரவாதிகள்
சுவாசித்த காற்றுதனைச்
சுவாசிக்காத மூக்கினால்
என்ன பயன்?

குஞ்சுகளின் பிஞ்சுக் கரங்களிலே
கொஞ்சிக் களமாடி நின்ற
சுடுகலன்கள் வீழ்கையிலே,
அதனைத் துள்ளிப் பற்றி
மீண்டும் இயக்காத
கரமுமொரு கரந்தானோ?

குருதியினால் நீர் பாய்ச்சி
உடல்களினால் உரமேற்றி
உயிர்ப்பிக்கும் எம் மண்ணில்
கால் பதித்து
படைக்கலனேந்தும்
பாக்கியம் பெற்றதைப் போல்
வேறு பயனென்ன
இப்பாரினிலே பெறவுண்டு!

ஈழப்பிரியா

## விடிந்தபின்னும் விடியலைத் தேடுகிறோம்

பொழுது புலர்கிறது.
நிலம் சிவக்கிறது.
நாற்றிசையும் இன்னிசைக்க,
பூக்கள் புன்னகைக்க,
வண்டுகள் தேன்குடிக்க…
சென்றவர்கள் வரவில்லை.
வீழ்ந்தவர்கள் எழவில்லை.
நீட்டிய கால்கள் மடியவில்லை.
மூடிய விழிகள் திறக்கவில்லை.

விடிந்து எவ்வளவு நேரம்!
நெடுந் தூரப் பயணம்!
கால்கள் ஓயவில்லை!
நிலம் நடுங்க
களம் கண்டார்கள்.

சுட்டிக் காட்டினார்கள்
சுதந்திரம் தேவையென்று.

தென்றல் அவர்களை
தொட்டுத் தழுவ,
புன்னை மரங்கள் பூச்சொரிய
தென்னை மரங்கள்
கையசைக்கின்றன.

கருவிழிகள் கதைசொல்ல
காதோரம் கேசங்கள்
அலைபாய
கலகலத்த
தோழியர் எங்கே?
காணவில்லை.
எம்
ஈரவிழிகளும்
இன்னும் காயவில்லை.

பழகிய நாட்கள் பல.
விலகிய நாட்கள்
ஒரு சிலவே.
இன்று
நிரந்தரமாகவே விலகி…

விழிமூடும்போதும் - இவர்
வீறுநடை தெரிகிறது.
வித்துடல்களோ
வீர காவியம் பாடுகின்றது.

மிதுனா

## எங்களால் முடியும்!



எங்கள் கைகள் வலுவுள்ளவை.
உயரத்தூக்கிய துப்பாக்கிகளைச்
சுமந்தபடி
நாம் பேசுவோம்.
எழுதப்படாத வரிகளை
எழுதி நிற்போம்.
காற்றைக் கிழித்த ரவைகள் நடுவும்
ஏட்டில் வடிக்கும் கருவின் நடுவும்
எங்கள் கைகள் வலுவுள்ளவை.
நெருப்பாற்றைக் கடந்து நிமிர்வதற்காய்
அனல் ஏறிந்த எங்கள் விழிகளின்
வீச்சுக்களை எங்கள்
பேனாமுனைகள் பேசும்.
எங்களால் முடியும்!

## அனல்விழிகள்

நீண்ட தெருவோரம்
நிராதரவாய்...
குழந்தையின் அழுகுரல்
சந்தையின் சலசலப்பு
ஒன்றுமேயில்லை.. ஒன்றுமேயில்லை
நட்டமரங்கள் பட்டுதிர்ந்து
பரவியிருக்கும்.
தொட்டுநின்ற கொடிகளும்
எட்டி விழுந்திருக்கும்.
படலையிலே கறையான்
பற்றிப் படர்ந்திருக்கும்.
எங்கும் மௌனமாய்
ஏகாந்தமாய்...
நாய்கள்கூட நட்டாற்றில்
விட்டதுபோல் மனித உடலின்
வரண்டுபோன என்புகளைச்
சப்பிக்கொட்டிச் சுவைபார்க்கும்.
சடசடக்கும் ரவைகளாற்
சற்றுத் தடுமாறி
வெற்றுப்பார்வையால் வெம்பியழும்
எசமானை நினைத்து
புதிய எசமானர்களைச் சபித்து.
எங்கோ தொலைவில்
பனிவிழும் இரவொன்றில்
சிலிர்த்த காற்றோடு
உதிரும் இலைகள் நடுவில்
நிம்மதியின் இருப்பைத் தொலைத்துவிட்டு
படபடக்கும் நெஞ்சோடு
அடுத்த கணநேர வாழ்வுக்கானபோராட்டம்.
உறக்கமற்று இரவு கழியும்.
அனல் மூச்சுக்கள் முட்டிக்கொள்ளும்.
கந்தகநெடியின் பாரம்சுமந்த காற்று
முகத்தில் அறையும்.
சேதப்பட்ட மண்ணை முத்தமிட்டபடி
புதிய பிறப்பு ஒன்றுக்காய்
மோன இருள் கவிந்த
வெளியைக் கடந்து
கண்கள் குத்திட்டபடி
மெல்ல ஊரும்
அனல் விழிகள்.

கொற்றவை

சிறுகதை

# நியதிகள் மாறும்!

ஆதிலட்சுமி சிவகுமார்

பனிக்குளிர் கதகதவென்று கக்கிக்கொண்டிருந்தது. மதிலுக்கு மேலாக உயர்ந்து வட்டமாய்ப் பரந்திருந்த நித்தியகல்யாணிச்செடி இலை தெரியாமல் பூத்துக்குலுங்கிக் கொண்டிருந்தது. கம்பளிப் போர்வைக்குள் உடல்புதைய, முகம் மட்டும் றோசாப்பூப் போலத் தெரிய அக்காவின் குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது. இந்தப் பனிக்குளிரிலும் முழுகிவிட்டு, தலைக்குத் துணி கட்டிக்கொண்டு மதில் ஓரத்தில் அமர்ந்து அக்கா சமையல் பாத்திரங்களை மினுக்கிக் கொண்டிருந்தாள். இரவு முழுவதும் குழந்தை அழுதுகொண்டே இருந்தது. அழுத குழந்தையை அமைதிப்படுத்துவதற்குள் விடிந்துவிட்டது. குழந்தை அமைதியாக உறங்கத்தொடங்கியதும் அக்கா வீட்டு வேலைகளில் மூழ்கிவிட்டாள்.

அக்காவுக்குத் திருமணமாகி மூன்று வருடங்களாகின்றன... அக்காவின் கணவர்-அத்தான் ஒருவரோடும் ''சோலிசுரட்டில்லாத'' பேர்வழி

காலை ஐந்துமணிக்கு எழுந்து உடற்பயிற்சி செய்வார்!

உடற்பயிற்சியை முடித்துக் கொண்டு கால்முகம் கழுவிக் கொண்டு பக்கத்திலுள்ள பேப்பர் கடைக்குப் போவார்.

**அக்காவின் கணவர் - அத்தான் ஒருவரோடும் ''சோலி சுரட்டில்லாத'' பேர்வழி.**

பத்திரிகையோடு ஒன்றிப் போய் அமர்ந்தால் ஏழு முப்பது ஆகும்வரை பத்திரிகையில் ஒரு எழுத்தும் விடாது படிப்பார்!

ஏழு முப்பது என்றவுடன்—ஒரு வினாடிகூடத் தாமதியாது கிணற்றடிக்குப் போவார். ஏழு நாற்பத்தைந்துக்கு சாப்பாட்டு மேசைக்கு வருவார். எட்டுமணிக்கு நிச்சயமாக அத்தானின் சையிக்கிள் ''கேற்'' றைத் தாண்டிவிடும்!

அக்கா மிகவும் சுறுசுறுப்பு! எட்டுமணிக்குள் பம்பரம் போல என்ன வேகத்தில் சுழன்று சுழன்று வேலை செய்கிறாள்?

அக்காவை நினைத்துப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது!

''கைக்குழந்தையோடை கொக்கா கஷ்டப்படுறாள்... கொஞ்சநாள் உன்ரை லீவு முடியும் வரையும் அவளோடை இருந்தியெண்டால் அவளுக்கு எப்பன் ஆறுதலா இருக்கும்'' அம்மாவின் இரப்பால் அக்காவுடன் தங்கவந்து ஒருவாரம் எனக்கு கழிந்து விட்டது.

இத்தனை நாளில் அக்கா மீது எனக்கு ஏராளமாய் பரிதாபம்!

''மூத்த பொம்பிளைப் பிள்ளை வீட்டுவேலை எல்லாம் பழகி இருக்க வேணும்'' அம்மா சொல்லிச் சொல்லி வீட்டுவேலைகளை முழுமையாய் அக்காமீது திணித்ததில், அக்காவின் படிப்பு இடைநடுவில் நின்றுபோனது!

அக்கா விளையாட்டில் வலு கெட்டிக்காரி. ''பொம்பிளைப் பிள்ளையள் அடக்க ஒடுக்கமாய் இருக்க வேணும்'' அக்காவின் இயல்பான திறமைக்கு முட்டுக் கட்டை விழுந்தது.

''காலாகாலத்திலை நடக்க வேண்டியது நடக்கவேணும்''- அப்பாவிடமிருந்த பணத்துக்கு அளவாய் அத்தான் அம்பிட்டார். அக்காவுக்கு கணவனானார்!

''எங்களுக்கு கஷ்டம் எண்டாப்போலை சும்மா விட ஏலுமே... மூத்த பிள்ளை ஊருக்கு சாப்பாடு போட வேணும்''— அக்காவின் திருமணம் சிறப்பாய் நடந்தது!

அத்தானின் கரம்பற்றி தலைகுனிந்தபடி நடந்த அக்காவை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை.

அத்தான் ஒரு அரசாங்க உத்தியோகத்தர்.

காலை எட்டு மணிக்குப் புறப்பட்டால் ஆறு மணிக்கு வருவார். இந்தப் பத்துமணி நேரத்துக்குள் அக்காவின் கடமைகளோ ஏராளம்!

வீட்டில் எந்த வேலைக்குமே உதவிக்கு ஆள் வைத்திருக்கக் குடும்பப் பொருளாதாரத்தில் இடமில்லை. எனவே எல்லாமே அக்காதான்.

குழந்தையின் உடுப்புகள் தோய்ப்பதில் ஆரம்பித்து- மூன்று நேரமும் சமைப்பது, சமையல் பாத்திரங்கள் கழுவுவது, அத்தானின் உடுப்புகள் தோய்ப்பது, எல்லாமே இந்த வீட்டில் அக்காதான்!

ஒருநாளைக்கு அக்கா அள்ளி ஊற்றுகிறதண்ணீரின்அளவு?.. சமயத்தில் விறகுகூட அக்கா கொத்துவாள்!

அனேகமாக காலைவேளைகளில் பரபரப்பு அதிகமாக இருக்கும்!

குழந்தை அழும், அறைக்குள் ஓடுவாள்!

அடுப்பில் கறி எரிந்து மணக்கும். அங்கும் ஓடுவாள்!

வாசலில் பால்காரனின் சைக்கிள் மணி கேட்கும். அங்கும் ஓடுவாள்! இவ்வளவுக்கும் அத்தான் முன்ஹோலில் பேப்பர் படித்துக்கொண்டே இருப்பார்! அவர் ''சோலிசுரட்டில்லாத மனிதர்''!

சம்பளக் காசைக்கூட அப்படியே கவருடன் கொண்டு வந்து அக்காவிடம் கொடுத்து விடுவாராம். அக்கா ஒருமுறை சொல்லிப் பெருமைப்பட்டிருக்கிறாள்.

அக்காவின் மீது ஏற்படும் பரிதாபம் எனக்குச் சிலவேளை கோபமாகவும் வருவதுண்டு. ''நீ அழுபிள்ளையோடை இவ்வளவு கஷ்டப்படுகிறாய்... அத்தான் உதிலை சும்மா தானே இருக்கிறார்... ஒருவாளி தண்ணி அள்ளித்தந்தா... இல்லாட்டி ஒரு துண்டு விறகு கொத்தித் தந்தா என்ன?...''

என்னுடைய கேள்வி அக்காவைப் பதறவைத்து விட்டது... ஏதோ கேட்கக்கூடாத கேள்வியை நான் கேட்டுவிட்டதுபோலப் பார்த்தாள்...

''அவர்ஆம்பிளையெல்லே... அவரைப்போய் வீட்டுவேலை செய்யச் சொல்லி... ச்சீ... ஆரன் கண்டால் என்ன நினைப்பினம்...?''

அக்கா சிலவினாடி இடைவெளிக்குப் பிறகு சொன்னாள். சடாரென்று இதயத்தின் மூலைக்குள் வலித்தது.

''அவன் ஆம்பிளைப் பிள்ளை... அப்படித்தான் நடப்பான்... நீ பொம்பிளைப் பிள்ளை... அவனை மாதிரி திரியஏலாது...'' அம்மா அடிக்கடி சொல்வது நினைப்பு வந்தது.

''அந்தநேரம்பெரியண்ணை படலேக்கை வரேக்கை தான் வாறன் எண்டு காட்டுறதுக்கு செருமுவார்... நாங்கள் பெட்டையள் எல்லாம் எழும்பி உள்ளுக்கு போயிடுவம்... அவருக்கு பொட்டையள் கூடிக்கதைக்கிறது பிடிக்காது...''

அம்மாவின் அம்மா-அம்மா--அக்கா என்று இன்று வரை தொடரும் கைவிலங்கு. இதை யார் உடைக்கப்போகிறார்கள்?

என்னுடைய மௌனம் அக்காவைப் பாதித்திருக்க வேணும்...

அக்கா என்ன சொல்லுகிறாள் என்பது சடாரென்று புரிந்தது!

''உனக்குக் கீழை விஜயாவும்... கவிதாவும் இருக்கிறாளவை... நீ நடக்கிறதைப் பார்த்துத்தான் அவளவையும் நடப்பாளவை... அதுக்கேத்தமாதிரி நீ அடக்கமா இரு...''

''நான் இப்ப நடக்கிறதிலை என்னபிழை கண்டு பிடிச்சிருக்கிறியள்...?'' என் கேள்வியில் கொஞ்சம் சினம் எட்டிப் பார்த்தது!

''அவர் காலமை எட்டுமணிக்குப் போனா... பின்னேரம் ஆறு மணி வரையும் அங்கை வேலைசெய்யிறவர்... வீட்டிலையும் கேட்கிறது நல்லதில்லை... நான் வீட்டிலை சும்மா தானை இருக்கிறனான்... செய்வன்...''

என்னைச் சமாளிப்பது போல அக்கா சொன்னாள்...

**“அவன் ஆம்பிளைப் பிள்ளை... அப்படித்தான் நடப்பான்... நீ பொம்பிளைப்பிள்ளை, அவனை மாதிரித் திரிய ஏலாது...'' அம்மா அடிக்கடி சொல்வது நினைவு வந்தது.**

''நீ வீட்டிலை சும்மாவோ இருக்கிறாய்?... காலமை எழும்பினா இரவு படுக்கப்போகும் வரையும் எவ்வளவு வேலை செய்கிறாய்?...''

''செய்யிறன்தான்... அதுக்குக்காசே இல்லைத் தானை... அதோட வீட்டிலை வேலை செய்யிறது பொம்பிளையளின்ரை கடமையெல்லோ?...''

அக்காவுக்காக அழுவதோ? சிரிப்பதோ?

''நீ யோசிச்சுப் பார்... நீ இந்த வீட்டிலை செய்யிற ஒவ்வொரு வேலைக்கும் சம்பளம் கணக்குப்போட்டுப் பார்த்தா அத்தானைவிட உனக்குத் தானை காசுகூட...''

அக்கா பெரிய பகிடியைக் கேட்டுவிட்டதைப்போல குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்!

''வீட்டிலை பொம்பிளையள் செய்யிற, செய்யவேண்டிய வேலையளுக்கும் ஆரன் கணக்குப் போட்டுப் பார்க்கிறதோ?''

''சரி... கணக்குப்போட்டுப் பார்க்க வேண்டாம்... நீ வீட்டிலை சும்மாஇருக்கேல்லை... அத்தானுக்கு ஈடாக நீயும் உன்ரை சக்தியைச் சிலவழிச்சு உழைக்கிறாய் எண்டதை விளங்கிக்கொள்ளுறியோ?''

அக்கா இப்போது அமைதியாகச் சிரித்தாள்!

''நீ கண்ட கண்ட புத்தகமெல்லாம் படிக்கிறியாம்... உனக்கிப்ப சினேகிதங்களும் சரியில்லையாம்... அம்மா கவலைப்பட்டவ... எங்கடை குடும்பம் அடக்கமாகவும் அமைதியாகவும் வாழ்ந்த குடும்பம்... நீயும் நாலு பேற்றை கண்ணிலை படுற மாதிரி நடவாதை...''

''நீ எங்களைவிடக் கூடப் படிச்சனி... கைநிறைய சம்பளம் எடுக்கிறாய் எண்டு உனக்கு நினைப்பிருக்கலாம்... பொம்பிளையள் என்னதான் படிச்சாலும் என்னதான் உழைச்சாலும் கலியாணம்கட்டினா புருஷனுக்கு அடிமை தானை...'' எனக்கு கோபம் குப்பென்று மூண்டது... ஆனால் நான் வாயே திறக்கவில்லை!

''எல்லாம் உன்ரை நன்மைக்காகத்தான் சொல்லுறன்... நாளைக்கு உனக்கெண்டு ஒரு வாழ்க்கை அமைஞ்சா நீ கஷ்டப்படக்கூடாதெல்லோ...''

அக்கா இன்னும் ஏதோவெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தாள்! அக்காவின் வார்த்தைகள் புரியவில்லை!

அடக்கம் என்ற பெயரில் தங்களைச் சுற்றி ஒரு அடிமைச் சிறையைப் போட்டிருக்கும் அக்கா, அக்காபோன்றவர்களுக்கு எப்போது விடியப்போகிறது? அக்கா போன்றவர்கள் இருக்கும்வரை அத்தான் போன்றவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்! இந்த நியதிகள் மாறும்வரை... இப்படித்தான் இவர்களின் வாழ்க்கை கழியப்போகிறது!

ஆனால்... நிச்சயமாக என் போன்றவர்களின் வாழ்க்கை இப்படியல்ல!

அம்மாவின் வாழ்க்கை போல... அக்காவின் வாழ்க்கைபோல அல்ல... எங்களின் வாழ்க்கை, நியதிகளை மாற்றிய நிரந்தர வாழ்க்கையாகவே இருக்கும்!

நம்பிக்கையோடு ஜன்னலைக் கடந்து என் பார்வை

**''நீ வீட்டிலை சும்மாவோ இருக்கிறாய்...? காலமை எழும்பினா இரவு படுக்கப் போகும் வரையும் எவ்வளவு வேலை செய்கிறாய்...?''**

**''செய்யிறன்தான்... அதுக்கு காசே இல்லைத் தானை... அதோடை வீட்டிலை வேலை செய்யிறது பொம்பிளையளின்ரை கடமையெல்லோ...?''**

**அக்காவுக்காக அழுவதோ...? சிரிப்பதோ...?**

விரிகிறது... வானத்தில் குருவிக் கூட்டமொன்று அலை அலையாகப் பறக்கிறது!

---

''உஷ்! அவளை எழுப்பிவிட்டுவிடப் போகிறாய்!''

தன்னைக் கவிந்த மேகம்போல் சூழ்ந்து வந்த தூக்கத்துக்கு தாய் ஆளாகித் தூங்கலானாள்

மங்கலான அருணோதயப் பொழுது அந்தக் குடிசையின் ஜன்னல் வழியாக எட்டிப்பார்க்கும் வேளையில் ராத்திரிக் காவல் ஒய்ந்ததை அறிவிக்கும் தேவாலய மணியோசை மிதந்து ஒலித்த நேரத்தில் தாத்யானா தாயை உசுப்பி எழச்செய்தாள்.

''நான் தேநீர் தயாரித்துவிட்டேன். முதலில் ஒரு கோப்பை தேநீரைக் குடியுங்கள். படுக்கையிலிருந்து எழுந்தவுடன் நேராகச் சென்றால் குளிர் உறைக்கும்''

ஸ்திபான் தனது சிக்கலான தாடியைக் கோதிவிட்டவாறே தாயிடம் அவளது விலாசத்தைக் கேட்டான். ராத்திரியில் தோன்றியதைவிட, இப்போதுஅந்த முஜீக்கின்முகம்தெளிவாகவும்பரிபூரணமாகவும்தோன்றுவது போலத் தாய்க்குப் பட்டது.

''நடந்ததையெல்லாம் எண்ணிப்பார்க்க எவ்வளவு வியப்பாக இருக்கிறது''! என்று தேநீர் சமயத்தில் சிரித்துக் கொண்டே சொன்னான் அவன்.

''என்னது''? என்று கேட்டாள் தாத்யானா;

''நாம் ஒருவருக்கொருவர் பழகிப் போனதுதான் எவ்வளவு எளிதாக...''

''நமது வேலையோடு சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலுமே ஓர் அதிசயமான எளிமை இருக்கத்தான் செய்கிறது'' என்று ஏதோ சிந்தித்தவாறே சொன்னாள் தாய்.

தாயிடம் விடைபெற்றுக்கொள்ளும்போது அவர்கள் எந்த விதமான பரபரப்பையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் அவளிடம் பேசாமலே, தாங்கள் செய்யும் சின்னஞ்சிறிதான பற்பல செயல்களின் மூலம் அவளுக்குச் சௌகரியம் செய்து கொடுப்பதில் தாங்கள் எவ்வளவு அக்கறை கொண்டவர்கள் என்பதைக் காட்டிக்கொண்டார்கள்;

தபால் வண்டியில் ஏறி உட்கார்ந்ததுமே, தாய் நினைத்தாள். ஸ்தீபான் ஒரு வயலெலியைப்போல மிகுந்த ஜாக்கிரதையோடும் சத்தமின்றியும் களைப்படையாமலும் வேலை செய்யத்தொடங்குவான். அவனது மனைவியின் குறைபாடுகள் அவன் காதுகளில் என்றென்றும் ஒலிக்கும். அவளது பசிய கண்களின் கூரிய ஒளி மறையவே மறையாது தனது இறந்துபோன குழந்தைகளை எண்ணி, தாய்மையுணர்ச்சியோடு உறுமிக்கொண்டிருக்கும் அவளது பழிவாங்கும் எண்ணம் அவள் உயிர் வாழ்கின்றவரையிலும் தீரவே தீராது.

நன்றி
மக்ஸிம் கார்க்கியின் **தாய்**

அவளது ஆழ்ந்த உறக்கம் திடீரெனக் கலைந்தது. மூக்கு நுனிகள் வியர்த்து இமைகள் படபடத்தன. குளிரையும் மீறி வியர்வையால் உடல் நனைந்தது. மீண்டும் அந்தக் கனவை ஞாபகப்படுத்திப் பார்த்தாள். 'சீ... ஏனிப்பிடி...' அந்த உருவம் அவள் மனக்கண் முன் மீண்டும் மீண்டும் வந்தது. அருவருப்பாய் உரோமக் கால்கள் குத்தியவண்ணம், எட்ட வைத்த கால்களை ஒரு சிலந்தியின் பாய்ச்சலோடு விரைவாக்கி ..

''ஏன் பிள்ளை. ஏதேன் பயங்கரமான கனவு கண்டனியே?'' அம்மா உறக்கம் கலைந்து வியப்போடு அவளை ஏறிட்டாள். அப்ப நான் பயந்து வீரிட்டேனோ? மனம் சில்லிட்டது. நாக்கு வரண்டு தாகமெடுத்தது. வெளியே இருளைக் கண்கள் துளாவின.

''இண்டைக்குச் சரியான குளிராய்க் கிடக்கு'' அம்மா உடலைக் குறுக்கியபடி கூறினாள். அவளது பற்கள் குளிரால் கிடுகிடுத்திருக்க வேண்டும். வார்த்தைகள் குழறியபடி வந்தன. பாளம்பாளமாக வெடித்த அம்மாவின் நெற்றிச் சுருக்கங்கள் மங்கிய விளக்கொளியில் இன்னும் பெரிதாகத் தெரிவதுபோலப் பட்டது. பாவம் அம்மா. எந்தக் குளிரோ பனியோ நாலுமணிக்கெல்லாம் எழும்பிவிடுவாள். அவளுக்கு நினைவு தெரிந்த நாள்முதல் அம்மா இப்படித்தான். விடியமுன்பு எழுந்து பம்பரமாகச் சுழன்று வேலை செய்வதைப் பார்க்க வியப்பாக இருக்கும்.

மீண்டும் உறக்கம் வரமறுத்தது. அந்தக் கனவைச் சுற்றிச் சுற்றியே ஓட்டங்கள் சுழன்றன. தொடர்ாக கோர்வையாக நினைவுபடுத்திப் பார்த்தாள். முடியவில்லை. ஆனால் பயமுறுத்துவதுபோல வந்த அவன் உருவமும் அந்த இடிபோன்ற குரலும் விகாரமாய் 'நில்' எனத் துரத்தியபடி வந்த உருவம்... சம்பந்தமேயில்லை. ''என்மனதில் ஏற்பட்ட அந்த வெறுப்புணர்ச்சியின் விளைவோ'' அவளது எண்ணங்கள் தடைப்பட்டன.

வெளியே விடிவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. எவ்வளவு இனிமையான நாட்கள் அவை. அவளது ஏக்கம் குவிந்த விழிகள் இருளை ஊடறுத்தன.

கதிர் தள்ளி நின்ற வயல் வெளிகளிலும், வரம்புகளிலும் கால்கள் நடைபயின்றன. வரம்புகளில் வழுக்கி விழுந்து புல்நுனிகளிற் படிந்த பனிமுத்துக்களைக் கால்களால் கலைத்தபடி வலம் வந்த வயல். வண்ணத்துப் பூச்சிகளைப் பிடிப்பதற்காய் கைகளை விரித்தபடி பறந்த நாட்கள் நினைவுக்கு வந்தன.

மாரிக் காலத்து வரவுக்காகக் காத்திருந்து ஓடிஓடி விதம்விதமான பூக்கன்றுகள் வைத்து அழகுபார்த்த அந்த வீடு முள்ளாய்க் குத்தியது.

''உனக்குச் சீதனமாத் தரப் போற வீடு என்றபடியால் இப்பிடி அழகுபடுத்திறாய்போலை'' பார்வதி அக்கா வாயளக்க, அவளுக்கு வந்த கோபம்

தலையைச் சிலுப்பி, ''சீதனமோ? நான் சீதனம் குடுத்துக் கட்டமாட்டன்?''

''எண்டாலும் வீடு உனக்கு வாறது வாறதுதானே?''

அதனால்தான் அவன் என்னைத் தேர்ந்தெடுத்தானோ? வெளிப்படையாய்க் கேட்காமல், நான் தனிப் பிறவி என்ற நிலையில்... எல்லாம் எனக்கு வரும் என்ற பேராசையில்... இல்லாவிடில் இப்பிடி நடந்திருக்குமோ? அவள் மனம் ஏமாற்றத்தாலே கூம்பியது. மறுகணம் வன்மம் கொண்டவள்போல நினைவைச் சிலிர்த்துக்கொண்டாள்.

அந்த அழகிய வீடும் வரிசையான தென்னைமரங்களைக் கொண்டிருந்த தோப்பும் மீண்டும் மீண்டும் நெஞ்சை அள்ளிச்சென்றன. வாழ்க்கையின் இனிய கனவுகளைச் சுமந்தபடி ஒட்டி உறவாடி, நாளும் பார்த்து மகிழ்ந்த அந்த நிலம், சுவரில் அழுக்கு விழாதபடி துடைத்துப் பேணிய வீடு, அவளது நினைவுகள் பொங்கி எழுந்தன.

இப்போது அவை டோசர்களால் அழிக்கப்பட்டிருக்கலாம். தேடிப் பொறுக்கி வளர்த்த றோசாச்செடிகள் கருகி மண்ணோடு மண்ணாகிப் போயிருக்கும். அவன் தந்த அந்த வெளிநாட்டுச் செடிகூட எப்படிப் பூத்துக் குலுங்கியது. இப்போது அதுவும் அவனது நேசம்போல, அன்பு போல கருகியிருக்கலாம்.

இறுமாப்போடு சிறகுகளை அடித்தபடி சேவல் ஒன்று கூவியது. நாய் எதையோ கண்டிருக்கவேண்டும். முற்றத்து மண்ணைப் பிராண்டியபடி சுற்றிச் சுற்றி வந்து குரைத்தது.

இந்தப் பனிவிழும் இரவில் அவன் நிம்மதியுடன் குறட்டை ஒலியோடு உறங்குவானோ? மீண்டும் அந்தக் கனவில் வந்த அவனது விகாரமான, பயங்கரமான உருவம் தோன்றி மறைந்தது.

அம்மா சலனமின்றி உறங்கிவிட்டிருந்தாள். அவளது மெலிந்த, சிறிய உருவம் அந்தப் போர்வைக்குள் அடங்கிவிட்டிருந்தது. வாழ்வின் தேக்கம் வயதைமீறி வயோதிபத்தின் நரைதிரை மூப்புக்களைப் படியவிட்டிருந்தது. குழிவிழுந்த, ஏக்கம் பிடித்த விழிகள் தன் மகளுக்காக உழைத்து ஓடாய்த் தேய்ந்துபோனதற்குச் சாட்சியாக...

''பிள்ளை...''

அம்மாவும் நித்திரை கொள்ளவில்லையோ? இல்லாவிடில் அவளைப் போல ஏதேனும் கெட்ட கனவு கண்டிருப்பாளோ...

அம்மாவினது வாழ்க்கையே ஒரு அதிஷ்டமற்ற துன்பமான கனவு போலத்தானே.

''பிள்ளை, அதுதான் அவன் வாறானாம், இஞ்சை வந்து கலியாணம் செய்துகொண்டு போகப் போறானாம்.''

அவளது நினைவுகள் தடம் புரண்டன:

''கடிதம் போட்டிருக்கிறான் எண்டு தாய்க்காறி சொல்லித்திரியிறா.'' அம்மா ஏக்கத்தோடு அவளை ஒருகணம் பார்த்தாள். 'உன் வாழ்வு இப்படிப் போச்சுதே' என்ற பரிதாபப் பார்வையோ?

எத்தனை கடிதங்கள் அன்பைக் கொட்டி, வார்த்தைகளில் உயிரின் துடிப்போடு வாரம் தவறாமல் வந்தபோது, அவள் உருகித்தான் போனாள். மாதம் ஒன்றாகி, பின் வருடத்தில் எப்போதாவது, பின் முற்றுமுழுதாக நின்றபோது அவள் எரிந்துகொண்டாள்.

அந்த நீண்ட தென்னந்தோப்பு ஊரோடு இழக்கப்பட்டதுபோல' அதை வைத்துக் கட்டிய நேசமும் தகர்ந்துவிட்டது.

''என்ரை உத்தியோகத்துக்கு சீதனம் ஒண்டும் வேண்டாம, வெறுமையாக சொத்து ஒண்டும் இல்லாதவளை என்னெண்டு கட்டுறது ''

வெளிநாட்டிலிருந்து இப்படிக் கடிதம் போட்டவனாம். ''திருமணம் சீதனத்தால் - நிச்சயிக்கப்படுகிறது.',

இது அன்று பகிடியாகக் கலா சொன்னது. அவள் வாழ்க்கையில் அதுதான் முற்றுமுழுதான உண்மையாக்கப்பட்டது.

( 11 ஆம் பக்கம் பார்க்க)

# பறவையுடன் உங்கள் மனப் பதிவுகள்

தமிழீழத்தின் பெண் எழுத்தாளர்களையும் பெண் ஓவியர்களையும் ஊக்குவிப்பதற்காகவும் எழுத, வரைய முனையும் பெண்களினது படைப்பாற்றலைத் தூண்டுவதற்காகவும் ' பறவையுடன் உங்கள் மனப்பதிவுகள் ' எனும் இப் பகுதியை நாம் ஆரம்பிக்கின்றோம்.

இங்கே ஒவ்வொரு முறையும் ஒரு சிறுகதை எழுதப்பட்டு, முற்றுப் பெறாமல் இடையில் நிறுத்தப்பட்டிருக்கும். அதை எழுதி முடிக்கும் பொறுப்பையும்,

இங்கே ஒரு கவிதை பிரசுரிக்கப்பட்டிருக்கும். அதற்குப் பொருத்தமான ஓவியத்தை வரையும் பொறுப்பையும்,

இங்கே பிரசுரிக்கப்பட்டிருக்கும் நிழற்படத்துக்கு பொருத்தமான கவிதை எழுதும் பொறுப்பையும்,

உங்களிடம் ஒப்படைக்கின்றோம்.

உங்களால் ஆக்கப்பட்டவற்றுள் பொருத்தமானவை என்று நாம் கருதுகின்ற சிறுகதை முடிவுகள் மூன்றும், கவிதைகள் மூன்றும், ஓவியங்கள் மூன்றும் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும். அவற்றை ஆக்கியவர்களுக்குத் தரமான பரிசுகள் வழங்கப்படும்.

இப்பகுதியில் கலந்துகொள்வதற்கான விதிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. சிறுகதைக்கான முடிவுகள் நடைமுறை வாழ்க்கைக்குப் புறம்பானவையாக அல்லாமல், இயல்பாக அமையவேண்டும். முடிவுகள் நூறு சொற்களுள் எழுதப்படவேண்டும்.
2. கவிதைகள் இருபது வரிகளுக்கு மேற்படாதனவாக இருக்க வேண்டும்.
3. ஓவியங்கள் பதினைந்து சதுர அங்குல அளவுக்கு மேற்படாதனவாகவும், கறுப்பு வெள்ளை ஓவியங்களாகவும் அமையவேண்டும்
4. இப்பகுதியில் கலந்துகொள்கின்றவர்கள் தமது சொந்தப்பெயர், முகவரி, வயது என்பவற்றை தனியே ஒரு தாளில் எழுதி இணைத்து அனுப்பவேண்டும்.
5. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ' பறவையுடன் உங்கள் மனப் பதிவுகள் ' பகுதிக்கான படைப்பு என்பதைக் குறிப்பிடவேண்டும்.
6. படைப்புகள் 1994 - 04 - 01 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படவேண்டும்.

காற்றுப்பட்ட திசையில்
உன் கால்கள் நடந்தபோது
வேட்டுக்கள் ஒலித்து
ஓய்ந்துபோன இடைவெளியில்
விம்மல்கள் கேட்கும்.
நேற்றுப் பெய்த மழையின்
ஈரம் வற்றி
ஊற்றுப் புனலாய்
குருதி வழியும்
புல்நுனிகள் கருகி
பொசுக்கென்று தீபரவி
நெருப்பேறி முகில்கள் நீளும்.
வாழ்ந்த வரலாறொன்றின்
வீழ்ந்த கதையா?
நேற்று நீ எங்கு வாழ்ந்தாய்?
நீண்ட வயல்வெளியில்
உன் அன்னை கரம்பிடித்து
நிலவுக்குக் கதைகூறி
உறவுக்குள் ஒடுக்கமாய்
ஒன்றாயுண்டு களித்தாயே.
இன்று......பிஞ்சுப் பாதங்கள்
விரியுமுன் பிரிந்த கதை......
குண்டுக்குள் குதறிய குருத்தாய்
உன் கூடு கலைந்தபோது......
வெறுமையாகி விழிகள்
ஈரம் சுமப்பது......
வேதனையில் வெந்து நிற்பது...
எத்தனை வயதுனக்கு
இத்தனை பாரம்?



# மனங்களைத் திறவுங்கள்

உலகெங்கிலுமே பெண்ணினம் காலத்துக்குக் காலம் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு ஆளாகி வருகின்றது. அது வளர்ச்சியடைந்த நாடாயிருந்தாலென்ன, வளர்முக நாடென்றால் என்ன, பெண்ணினம் பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்படுகின்ற இனமாகத்தான் இருந்து வருகின்றது.

தாம் நினைப்பதைக் கூடச் செய்வதற்கு இயலாத நிலையில், அனுமதிக்கப்படாத நிலையில்தான் பல பெண்கள் இருக்கின்றார்கள். ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும்போது வளர்முக நாடுகளிலுள்ள பெண்களே இப்பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள் எனலாம்.

வீட்டிலேயே இருக்கும் ஒரு சாதாரண குடும்பத் தலைவிக்குள்ள அதே பிரச்சினைகளை படிக்கின்ற மாணவியும், வேலை செய்து உழைக்கின்ற பெண்ணும் எதிர்நோக்குகின்றார்கள் என்பதைப் 'பலர்' ஏற்றுக் கொள்வதில்லை. தார்வீதியே தெரியாமல் வீட்டுக்குள் இருக்கின்ற பெண்ணும், தார்வீதியால் மிதிவண்டியில் பயணம் செய்கின்ற பெண்ணும் ஒரே பிரச்சினையைத்தான் எதிர்நோக்குகின்றார்கள் என்பதையும் இந்தப் 'பலர்' ஏற்றுக்கொள்வதில்லை.

அதைவிட இந்தப் பிரச்சினைகளைப் பிரச்சினைகளாகப் பெண்களே கருதாத காலம் ஒன்றும் இங்கு இருந்தது. ஆனால் இப்போது அது மாறி. தமது பிரச்சினைகளைப் பெண்கள் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் நீண்டகாலமாக அடக்கப்பட்ட இனமாக, வாய் பேசாத இனமாக இருந்து பழகிய காரணத்தால் தமது பிரச்சினைகளைப் பேசத் தயங்குகிறார்கள்.

அவர்கள் எந்தளவுக்குத் தமது நிலையைப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் நினைப்பதை எந்தளவுக்குச் சாதிக்க முடிகின்றது என்பதை அறியும்பொருட்டு வேறுபட்ட நிலைகளிலுள்ள சில பெண்களைச் சந்தித்து உரையாடினோம். அவர்களுடன் உரையாடியதை அப்படியே கீழே தருகின்றோம்.

பாக்கியம் யேசுதாஸ் எனும் நாற்பத்தைந்து வயதான குடும்பத் தலைவி ஒருவருடன் உரையாடியபோது,

''எங்கட சொந்த இடம் மன்னார்; என் பத்தொன்பதில யாழ்ப்பாணம் வந்திட்டம். கடல்தொழில் செய்துதான் சீவியம் போகுது.

பிள்ளையள் எல்லாரையுமே படிப்பிக்க வேணும் எண்டு ஆசை. அதை வாயை துறந்து சொல்லஏலாதநிலை. எதைச் சொன்னாலும் 'நடக்கிற ஒண்டைப் பற்றிக் கதை' எண்டு சொல்லிப் போடுவார். அதாலை நான் ஒண்டுமே கதைக்கிறதில்லை. 'மூத்த பிள்ளையை மேலே படிப்பிப்பம்' எண்டு சொன்னதுக்கு, 'பொம்பிளைப் பிள்ளைக்கு இவ்வளவும் காணும். பேசாம நிப்பாட்டு' எண்டார். எதிர்த்துக் கதைச்சா, 'குடும்பம் நடத்திறது நீயோ. நானோ?' எண்டு சண்டை பிடிப்பார். ஒண்டுமே கதைக்க ஏலாது'' என்றார்.

இருக்கின்ற வருமானத்தை வைத்துக் குடும்பத்தை நடத்தும் திறமை தன்னிடமிருந்தும் அதைச் செயற்படுத்த முடியாத நிலையில் தான் இருப்பதாகக் கவலையுடன் கூறினார்.

ஃ ஃ ஃ

வீதியோரமாக அமர்ந்து வறுத்த நிலக்கடலைகளை விற்பனை செய்கின்ற நாற்பது வயதான இலட்சுமி சுந்தையா என்பவர்,

'எனக்கு மூண்டு பொம்பிளைப் பிள்ளைகளும் ஒரு ஆம்பிளைப் பிள்ளையும் இருக்கு.

நான் இருவது வருசமா இந்தத் தொழிலைச் செய்து வாறன். என்ர புருசனும் இந்தத் தொழில் தான் செய்யிறவர். இதில வாற வருமானத்தை வைச்சுத்தான் எல்லாத்தையும் சமாளிக்க வேணும்.

எனக்குத்தான் படிப்பில்லை. என்ரை பிள்ளைகளையாவது படிப்பிச்சு, நல்லா வளக்கவேணும் எண்டு எனக்கு விருப்பம். 'பொம்பிளைப் பிள்ளைக்கு என்ன படிப்பு? இருக்கிற கஸ்ரத்தில இது இல்லாத குறைதான். ஏதாவது தையலுக்கு விடு, எண்டு சொல்லுறார்'' என்றார் வேதனையுடன்.

இவரது கணவர் தனது வருமானத்தைப் போதை தரும் பானங்களை வாங்குவதில் செலவழித்து விடுவார். அதனால் இக் குடும்பம் மிகவும் வறுமையில் வாடுகிறது. ஆனால், தான் 'குடும்பத் தலைவர்' என்ற அதிகாரத்தை அடிக்கடி அவர் நிலைநாட்டிக் கொள்வார். மனைவி அதைப் பற்றி ஏதாவது கதைத்தால் கை நீட்டி அடித்தும்விடுவார். பிள்ளைகள் எந்நேரமும் பயந்தநிலையில் தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இப் பெண்மணி எம்மிடம் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

யாழ். பல்கலைக்கழக மாணவி சூரியகலா என்பவரைச் சந்தித்தபோது,

''எனது சொந்த இடம் வவுனியா. இப்ப யாழ்ப்பாணத்தில் இருக்கிறம். எனக்கு ரெண்டு ஆண் சகோதரரும் ஒரு சகோதரியும் இருக்கு அம்மா வவுனியாவில அரசாங்க உத்தியோகம் செய்தவா. ஆமிப் பிரச்சினையாலை வேலையும் போட்டுது. நான் இஞ்சினியரா வரவேணும் எண்டு வீட்டில எல்லாருக்கும் விருப்பம். எனக்கு டொக்டரா வரவேணும் எண்டுதான் விருப்பம். ஆனா அது முடியாமப் போச்சுது. இப்ப தமிழ்த்துறையிலைபடிக்கிறன். போன வருசம் நான் நினைச்சது இந்த வருசம் மாறீட்டுது. தமிழில நல்ல தேர்ச்சியடைஞ்சு ஒரு வேலை செய்யவேணுமெண்டு நினைக்கிறேன்.

ஆனா அப்பாவுக்கு நான் இதுபடிக்கிறது பிடிக்கேல்லை. நான் என்ன செய்கிறது? எனக்கு ஏலுமானதைத் தானே நான் படிப்பன். ஆனா அப்பா 'உன்னைப் படிப்பிச்ச நேரம் மகனைப்படிப்பிச்சிருந்தாலும் அவன் இஞ்சினியரா வந்திருப்பான். உன்னைப் படிப்பிச்சு என்ன பிரயோசனம்?' எண்டு சொல்லுகிறார். இதெல்லாத்தையும்விட பல்கலைக்கழகத்துள்ள நான் வாற நேரம் பட்ட கஸ்ரம் கொஞ்சநஞ்சமில்லை. அமைதியான சுபாவமுவள்ளஎன்னை எல்லாரும் சீண்டிப் பார்த்தாங்க. இதுக்கெல்லாம் முகம் குடுத்துக்கொண்டு தான் என்ரை படிப்பைத் தொடருகிறன்'' என்றார்.

'உன்னைவிட உன்ரை அண்ணன் படிச்சிருப்பான்' என்று சொல்லிச் சொல்லியே தன் தந்தையால் தான் துன்புறுத்தப்படுவதாகக் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

க. பொ. த (உ|த) பயிலும் மாணவியான சகிலா,

''எனக்குச் சின்னனில இருந்தே சங்கீதம் எண்டாச் சரியான விருப்பம். ஆனா 'பொம்பிளைப் பிள்ளைக்கென்ன ஆட்டமும் பாட்டமும் வேண்டிக்கிடக்கு. பேசாம வர்த்தகம் படி' எண்டு அப்பா சொல்லுவார். நான் ஓ|எல் வரை சங்கீதத்தைத்தான் விரும்பிப்படிச்சனான். ஓ|எல் எடுக்கிற நேரமும், அதுக்குப் பிறகும் வர்த்தகத்தைப் படிக்கச் சொல்லி அப்பா வற்புறுத்த ''விரும்பாததை படிக்கிறத விட விரும்புறதை படிக்கிறன்'' எண்டு கேட்டேன். கோபத்தில அவர் பக்கத்திலை இருந்த கதவுச் சட்டத்தாலை அடிக்க வந்திட்டார். 'அப்பா சொல்லுறதைக் கேக்கவேணும்' எண்ட நிலையில் இப்ப அவர் சொல்லுறதைச் செய்து கொண்டிருக்கிறன். வாற முடிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான்'' என்று சொன்னார்.

ஃ ஃ ஃ

ஆசிரியையாகப் பணிபுரியும் குடும்பத் தலைவியான மனோன்மணியைச் சந்தித்தபோது,

''ரெண்டு பேருமே வேலை செய்து உழைக்கிறோம். வேலை முடிஞ்சு, நானும் அவரைப்போல உடலலுப் போடைதான் வீட்டுக்கு வருவன். வந்தா வீட்டுவேலை முழுதும் என்ரை தலையிலைதான். வளர்ந்த பிள்ளையள் இருக்கிறபடியா ஓரளவு உதவியாக இருக்கும். சோதனை நேரமெண்டால் பிள்ளையளுக்கு நேரமிருக்காது. எனக்கும் பள்ளிக்கூடத்தில வேலை கூடவாயிருக்கும். வீட்டிலேயும் வேலை இன்னும் கூடுமேயொழிய குறையாது.

என்ரை அம்மா, அப்பாவோடை அவருக்கு ஒத்துப் போகாது. அதாலை என்னையோ பிள்ளையளையோ அங்கே போகவிடமாட்டார்.

'இதைச் செய்வமோ, அதைச் செய்வமோ' எண்டு ஆசையோட எதையாவது கேட்டா, 'இப்ப இதோ முக்கியம், அவசரம்' எண்டு என்ரை கருத்துக்கு முற்றுப்புள்ளி வச்சுவிடுவார். உத்தியோகம் பாத்தென்ன, உழைத்தென்ன என்ரைவிருப்பங்கள் துளியளவு கூடநிறைவேறாது'' என்றார்.

ஃ ஃ ஃ

பெண்போராளிகளின் ஆளுமையைப் பற்றி விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் தணிகைச் செல்வி உரையாடும்போது,

''ஆரம்ப காலத்தை விட இப்போது பெண் போராளிகள் நன்றாக வேலை செய்கிறார்கள். பொறுப்பாளர்களே பாராட்டுகின்ற அளவுக்கு கொடுக்கப்பட்டவேலைகளை இருப்பவர்களை வைத்துச் செய்து முடிக்கின்றனர்.

இதைவிட பெண்களுக்கெனப் பிரத்தியேகமான வேலைகளை இவர்கள் செய்கின்றார்கள். மிதிவண்டிகளைத் திருத்துதல், தையல் இயந்திரங்களைத் திருத்துதல் மணிக்கூடுகளைத் திருத்துதல் போன்ற வேலைகளைச் சாதாரண பெண்களுக்குப் பழக்குவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றோம்.'' என்றார்.

ஃ ஃ ஃ

இது ஒரு ஆழமான ஆய்வு அல்ல. மேலெழுந்தவாரியாகச் சில பெண்களைச் சந்தித்தபோது அவர்களிடமிருந்து கிடைத்த சில தகவல்களே இவை.

போராளிகளின் வாழ்க்கை வேறுபட்டது. ஆனால் சாதாரணப் பெண்கள் அப்படியல்ல. இன்னும் ஆழமாகப் போனால் பல விடயங்களை அறிந்துகொள்ளலாம். அப்போதுதான் தமிழீழப் பெண்களின்பிரச்சினைகளின்உண்மையான தார்ப்பாரியம் தெரிய வரும். பிரச்சினைகளின் முழுவடிவமும் தெரிந்தால்தான் அதற்குரிய தீர்வை முன்னெடுக்கலாம். ஆகவே நாம் தமிழீழப் பெண்களனைவரின் பிரச்சினைகளையும் தெரிந்து கொள்ள விரும்புகின்றோம். எனவே உங்களின் பிரச்சினைகளை நேரிலோ, கடித மூலமோ எமக்கு அறியத் தருமாறு அனைத்து பெண்களையும்கேட்டுக்கொள்கின்றோம்.

## பொன்னிலா

கடந்த வருடத்தைப்பொறுத்தவரை நாம் நினைத்ததை விட, எதிர்பார்த்ததை விட அதிகமான வேலைகளைச் செய்துள்ளோம். வீதி அமைத்தல், குளங்களைப் புனரமைத்தல் போன்ற பாரிய வேலைகளை மிக விரைவாகவும், செலவுச் சுருக்கமாகவும் செய்து முடிக்கும் திறன் அவர்களிடம் உண்டாகியிருக்கிறது.

---

நோபல் பரிசுக்கு இணையான மற்றொரு பரிசு Right Livelihood Award என்று கருதப்படுகின்றது. இவ் ஆண்டு இந்த விருது வந்தனா என்ற இந்தியப்பெண் உட்பட நால்வருக்கு வழங்கப்பட்டது.

1976 ஆம் ஆண்டில்மட்டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட முழு நாவல்களை எழுதி பிரசுரித்து 'கின்னஸ்' சாதனையாளர் புத்தகத்தில் இடம் பெற்றவர் பிரிட்டனைச் சேர்ந்த உர்சுலா ப்ளூம் என்ற பெண் எழுத்தாளர். 1903இல் இவரது முதல் கதை வெளிவந்தபோது இவருக்கு வயது எட்டு.

ரெபெக்கா ஸ்டீபன்ஸ் என்பவரே எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதலாவது பிரித்தானியப் பெண். ஜப்பான், இந்தியா போன்ற ஆசிய நாடுகளின் பெண்கள் ஏறிய பின்னர்தான் இந்த ஐரோப்பியக் கண்டப் பெண் ஏறினார்.

கரோல் ஓ கான்னல் என்ற அமெரிக்க நாவலாசிரியைக்கு 3.3 கோடி ரூபா முற்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெண்மணி ஒரு ஏழை. பசி, பட்டினியால் பலகாலம் வாடியவர். விளையாட்டு மைதானங்களில் எடுபிடி வேலை, விடுதியில் பணிப்பெண் என்று பல வேலைகளைச் செய்தார். ஓவியம் வரைந்தார். எதுவுமே அவரது வறுமையைப் போக்கவில்லை. முடிவில் 'மலோரிஸ் ஆரக்கிள்' என்ற நாவலை எழுதினார். அமெரிக்காவிலுள்ள வெளியீட்டாளர்கள் அந்த நாவலை வெளியிட மறுத்துவிட்டார்கள்.

பின்னர் இவர் பிரபல பிரித்தானிய வெளியீட்டு நிறுவனமான 'ஹட்ஷின்சன்'னை நாடினார். அதன் நிர்வாகப் பொறுப்பில் இருககும் ஜோர்ஜினா கேப்பல் என்ற பெண்மணி இந்நூலை தமது வெளியீட்டுக்கெனத் தேர்ந்தெடுத்து முற்பணமும் வழங்கியுள்ளார்.

மிட்சுஃபுஜிவா என்ற ஜப்பானியப் பெண்மணி தனது நாற்றுப்பன்னிரண்டாவது வயதில் திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பைத் தொடங்கியிருக்கிறார். படிப்பில் அதிக நாட்டமும், தெளிவான கண்பார்வையும், படிப்பதற்குப் போதிய நேரமும் இந்த வயதில் நிறையக் கிடைத்திருப்பதாக அவர் கூறுகின்றார்.

ருக்மிணி அருண்டேல்.

பாரம்பரியமிக்க வைதிகக் குடும்பத்தில் பிறந்தவர். 1904 இல் பிறந்தார். 1919ஆம் ஆண்டு பலத்த எதிர்ப்புக்கிடையில் திரு. அருண்டேல் என்னும் ஐரோப்பியரை மணந்து கொண்டார். திருமணத்தின்பின்னும்நடனப்பயிற்சியைத் தொடர்ந்து 1934இல் அரங்கேற்றம் செய்தார். நாட்டியத்துக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். 'சதிர்' என்னும் பெயரால் அழைக்கப்பட்டுவந்த நாட்டியத்துக்கு தனிமதிப்பையும் சமூகத்தில் ஒரு உயர்ந்த இடத்தையும் உண்டாக்கினார். நாட்டிய உடையில் பெருத்த மாறுதலை உண்டாக்கினார். நாட்டியத்துக்காக 'கலாஷேத்ரா' என்னும் பெயரில் ஒரு கல்வி நிறுவனம் அமைத்தார். தன் கணவருடனும் ஜே.கிருஷ்ணமூர்த்தியுடனும் Theosophical Societyயின்பணியில் தீவிரமாகப் பங்காற்றினார்.

மைதிலி சிவராமன் தமிழ் நாட்டில் பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார். ஜனநாயக மாதர் சங்க அமைப்பின் தலைவியாக இருந்து கொண்டு பெண்ணுரிமைகளுக்காக அயராது போராடி வருகிறார்.

# அரசியலில் ஆணாதிக்கம்

சுடாரட் கேயுராபன் என்பவர் தாய்லாந்திலுள்ள ஒரு பெண் அரசியல்வாதி. ஆணாதிக்க நடைமுறைகளில் அனுபவம் பெற்றவர். ஆனாலும் தாய்லாந்தில் நடந்த பங்கு விலைகள் தொடர்பான ஊழல்களில் சம்பந்தப் பட்டவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது இவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. அது சம்பந்தமாக வினவியபோது இவர்,

''நீர் ஏன் விபச்சாரப் பிரச்சினைகளோடு நில்லாது, இவற்றிலெல்லாம் தலையிடுகின்றீர்?''

என்று கேட்கப்பட்டாராம். தாய்லாந்து அரசின் குரல்தரவல்ல இணைப் பேச்சாளரான இவர், வர்த்தகமும் கணக்கியலும் பாடத்தில் பட்டதாரி. இதைவிட பாங்கொக்கின் புகழ்பெற்ற பல்கலைக் கழகமான 'சுயலாங்கோ' வின் எம். பி. ஏ. பட்டதாரி இவர்.

''ஆண்களைப்போல் பெண்கள் நன்கு பயின்றிருந்தாலும் சமமான மதிப்பு அளிக்கப்படுவதில் சிரமங்கள் உள்ளன'' என்றார்.

தாய்லாந்தின் பெண் அரசியல்வாதிகள் தாங்கள் 'அலங்காரப் பொம்மைகளாக' மட்டும் கருதப்படுவதை எதிர்க்கின்றார்கள்.

''பெண்கள் அழகாகத் தோற்றமளிக்க விரும்பினால் அதற்காக அவர்கள் நன்கு வேலை செய்யமாட்டார்கள் என்று அர்த்தமல்ல''

என்று அவர்கள் சொல்கின்றார்கள்.

தாய்லாந்தில் ஒரு பழைய பழமொழி உண்டு 'ஒரு பெண் தான் யானையின் பின்னங்கால்' என்பதே அந்தப் பழமொழி. ஒரு குடும்பத்தில் பெண் எவ்வளவு முக்கிய பாத்திரத்தை வகிக்கிறாள் என்பதையே இது புலப்படுத்துகிறது. ஆனால் இந்தப் பெண்கள் பெரும்பாலும் யாராலுமே பாராட்டப்படாதவர்கள்.

எனினும் பெண்கள் தாய்லாந்திலே திரைக்குப் பின்னால் நிற்கவில்லை. பல முக்கிய பொறுப்புகளை வகிக்கின்றார்கள். அரசின் தூதுவர்களாக, அரசதரப்பு வழக்குத் தொடுனர்களாக, நீதிபதிகளாக ............

ஆனாலும் அரசியலில் பெண்கள் இன்னும் ஒரு சக்தியாக வளரவில்லை. முந்நூறு உறுப்பினர்களைக் கொண்ட தாய்லாந்தின் கீழ் சபையில் பதினாறு பேர்மட்டுமே பெண்கள். எனினும் படிப்படியான முன்னேற்றம் தென்படுகின்றது. 1988ஆம் ஆண்டில் பத்துப் பெண்கள். 1992ஆம் ஆண்டில் பன்னிரண்டு பெண்கள். இப்போது பதினாறு பெண்கள்.

பிரதமர் சுவான் - லீ - பை மிதவாதியாக இருந்தும் மந்திரிசபையில் ஒரு பெண் கூட அமைச்சராக இல்லை. தாய்லாந்தின் முதல் பெண் மாகாண ஆளுனர் சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.

தாய்லாந்தில் மட்டும்தான் பெண் அரசியல்வாதிகள் குறைவு என்று சொல்லமுடியாது. தாய்லாந்தின் முன்னாள் பெண் மந்திரியான கண்யில் சுபத்திரா,

''ஸ்கண்டிநேவிய நாடுகளை விட உலகெங்கிலுமே - அமெரிக்கா உட்பட - பெண் அரசியல் வாதிகள் குறைவு' என்று குறிப்பிட்டார்.

இருந்தாலும் தாய்லாந்தின் பெண் அரசியல்வாதிகள் தாம் ஆசியாவின் ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது பின்தங்கியுள்ளதாக உணர்கின்றார்கள்.

''இந்தியா, பாகிஸ்தான், மலேசியா எல்லாம் எம்மைவிடப் பின்தங்கியுள்ளதாக நினைத்தேன். உண்மையில் அவர்கள் எவ்வளவோ முன்னேறியுள்ளார்கள்,''

என்றார் முன்னாள் மந்திரியான சைசூரி சட்டிகல்.

பிலிப்பைன்ஸ் காங்கிரஸ் முன்னெப்போதும் இல்லாத வகையில், தற்போது அதிக பெண்களைக் கொண்டுள்ளது. தலைநகர் மணிலாவில் இருபத்துநான்கு செனட்டர்களில் நால்வர் பெண்கள். அதில் ஒருவர் மேல்சபை உபதலைவர். அதிபர் பிடல் ராமோஸ் தனது இருபத்திரண்டு பேர்கொண்ட மந்திரிசபையில் இரண்டு பெண்களை நியமித்தார்.

சிங்கப்பூரில் மூன்று பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அங்கு பிரதமர் கோ-சொக்- டாங் தனக்கு அடுத்த முறை ஆறு பெண்கள் வர வேண்டும் என எதிர்பார்க்கின்றார்.

மலேசியாவில் இரு பெண் அமைச்சர்களும், பத்து பெண் மேல்சபை உறுப்பினர்களும் உண்டு.

''தாய்லாந்தில் மேல், கீழ் சபைக் குழுக்களின் செயலாளர் பதவி பெண்களுக்கு உண்டு. ஆனால் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இல்லை. ஏனெனில் பெண்கள் அண்மையில்தான் அரசியலுக்கு வந்துள்ளார்கள். அவர்கள் அனுபவத்தில் குறைந்த இளவயதினர்,''

என்கிறார் சுடாரட்.

''பிலிப்பைன்ஸ் பெண்கள் எப்பொழுதுமே அரசியலில் ஈடுபட்டுள்ளார்கள்,''

என்றார் தார்லக் மாகாண ஆளுநரான மாக்கரிட்டா. இவர் பிலிப்பைன்ஸின் பிரசித்தி பெற்ற அரசியல்வாதியான குரோசன் அக்கினோவின் மைத்துனி.

''பெண்களின் இதயங்கள் மென்மையானவை என்று சிலர் சொல்கின்றார்கள். எனவே அரசியலில் தில்லுமுல்லுகளைத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள்,''

என்கிறார் லடவன் எனும் அமைச்சர். ஆனால் சுடாரட் இதை மறுக்கிறார்.

''இப்படியெல்லாம் நாம் பார்ப்போமானால், எம்மைச் சுற்றி நாமே ஒரு மதிலை எழுப்பிக்கொள்வோம்''

என்கிறார் இவர்.

தாய்லாந்து மக்கள் பழமை விரும்பிகள். ஏனெனில் அவர்களுடைய பண்பாடுகள், மரபுகள் அப்படியானவை. முன்பு ஆண் போராளிகள் நகரங்களைக் கைப்பற்றியபோது, அவர்களுக்குப் பரிசாக பெண்கள் கொடுக்கப்பட்டார்கள்.

''ஆண்கள் மாத்திரமல்ல. பெண்களே தம் பெண் அரசியல்வாதிகளை நம்புவதில்லை''

என்கிறார் சுபத்ரா.

''ஏன் பத்திரிகைகள் பெண் அரசியல் வாதிகளிடம் பெண்கள், சிறுவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை மட்டுமே வினவுகின்றார்கள்? அரசியல், பொருளியல் பற்றிக் கேட்பதில்லை?''

என்கிறார் லடவன்.

இப்பொழுது தாய்லாந்து மக்கள், அரசியல் அரங்கில் பெண்களைக் காணப் பழகிக் கொள்கின்றார்கள். அத்துடன் ஆண்களைவிடப் பெண்களையே அவர்கள் விரும்புவதாக சுடாரட் சொல்கின்றார்.

பல வாக்காளர்கள், தாம் ஆண் அரசியல்வாதிகளைக் கண்டு களைத்துவிட்டதாகக் கூறினார்களாம். எனவே தாமும் தனியாகப் பெண்களுக்கே வாக்களிக்கப் போவதாகக் கூறினார்களாம். இதற்கு ஒத்துப்போகும்வகையில் அரசாங்கமும் சட்டத்தை மாற்றி, பிரதி மாவட்ட அதிகாரிகளாகப் பெண்களை நியமித்துள்ளது.

1992ஆம் ஆண்டில் ஆசிய, பசுபிக் பெண்களுக்கான அரசியல் நிலையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. பெண்களின் உரிமைக்காக உழைத்து வந்த சுபத்ரா, தேர்தலில் பங்கு பற்றவில்லை. எனவே அவரைப் பணிப்பாளராக நியமித்துள்ளனர்.

''பெண்களைவிட ஆண்களே தலைவர்களாகப் பழக்கி விடப்படுகின்றார்கள்''

என்கின்றார் சுபத்ரா.

மணிலாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந் நிலையம் நிலைமையைச் சீராக்கும்வரை, உள்ளும் வெளியேயும் ஆணாதிக்கமே தொடரும்.

''ஆண்கள் 'மகளிர்முதலில்' என்று சொல்வதை நான் வெறுக்கின்றேன். எம்மிடம் உங்களிடமுள்ள திறமையும் சாதுரியமும் உண்டு. எனவே எங்களைத் தடுக்காதீர்கள்''

என்கிறார் சுடாரட்.

---

## பெண்களின்

பங்கெடுத்துக்கொள்வதையும் போராட்டகாலவிளைவுகளை எதிர்கொள்ளும் சக்தியையும், மனோதிடத்தையும் பெற்றிருக்கும் பெண்களின் முன்னேற்ற நிலையையும் குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன்.''

'' தமிழீழத்திலுள்ள சராசரிப் பெண்களின் வாழ்க்கையைவிட நீங்கள் வித்தியாசமாக வாழ்வதாக உணர்கின்றீர்களா?''

''ஆம். சமூகத்துக்குச்சவால் விட்டு பெண்ணியக் கருத்துக்களை சமூகத்துக்குள் ஊடுருவப் பண்ணுதல் நடைமுறையில் சாத்தியமில்லை என்ற கருத்தில் உறுதியாக இருக்கிறேன். பெண் என்றால் அடங்கி வாழ்தல் என்ற மரபை எதிர்க்கும் அதே நேரம், சமூகத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில் எனது செயற்பாடுகளைச் செய்து வருவதாலும்,

பெண்களினால்செய்யப்படக் கூடாதது,செய்யப்படமுடியாதது என்று கருதப்படுகின்ற சில செயற்பாடுகளை என்னுடைய தேவையின் பொருட்டு சமூகத்தின்தேவையின் பொருட்டும் நடைமுறைப் படுத்த வேண்டிஇருந்தால் சமூகத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில்நடந்துகொள்ளலாம்என்ற உளப்பாங்கு என்னிடம் இருப்பதாலும்,

நான் வித்தியாசமாக வாழ்வதாக உணர்கின்றேன்.''

''பெண்ணியக் கருத்துகள் எல்லாப் பெண்களையும் சென்றடைவதற்கு என்ன செய்யலாம் என்று நினைக்கின்றீர்கள்?''

''அறிவு சார்ந்த கருத்துக்களை பெண்கள் மத்தியில் பரப்புதல் வேண்டும். இதற்கு மிகவும் இலகுவான வழிமுறைகளைக் கையாளலாம். ஆரம்பத்தில் கலை, இலக்கிய வடிவில் இவை பெண்கள் மத்தியில் பரப்பப்பட்டால் அதிகமான பயன்களைப் பெறலாம். அத்துடன் பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். அத்துடன் பெண்கள் மத்தியில் நம்பிக்கையை ஊட்டக்கூடிய வகையில் பிரச்சாரங்கள் செய்யப்படும்போது இது சாத்தியப்படும். ஆனால் இங்கு கவனிக்கப்படவேண்டிய ஒரு முக்கிய அம்சம் ஒன்றும் இருக்கின்றது அதாவது ஒரு நிறுவனத்தின் ஊடாக, அதுவும் அமைப்பு முறைக்கு உட்பட்ட வகையில் இதனைச் செயல்முறைப் படுத்தினால் பெண்ணியக் கருத்துக்கள் எல்லாப் பெண்களையும் சென்றடையும். மேற்கத்தேசம் போன்று மிக மோசமான உச்சக்கட்ட பெண்ணியக் கருத்துக்களோ, அதே நேரம் வளர்முக நாடுகளில் காணப்படும் உச்சக்கட்ட பெண் அடிமைக் கருத்துக்களோ எமது மண்ணில் காணப்படாததால் இத்தகைய நடவடிக்கைகள் சாத்தியமானதேயாகும்''

''நீங்கள் வாசித்த பெண்ணியக் கருத்துக் கொண்ட நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுவீர்களா?''

''ஆம். குறிப்பிடலாம். நான் அதிகமாகப் பருவ இதழ்களையே வாசித்துக்கொள்ளும் பழக்கமுடையவள். ஆனாலும் பெண்கள் உரிமைகள் குறித்த புத்தகங்களை தேடிஎடுத்தும் வாசிப்பதுண்டு ஈழநாதத்தில் கடமையாற்றும்போது தேடிப் பார்ப்பதற்குரிய நேரம் கிடைத்ததில்லை. பல்கலைக்கழகம் சென்ற பின்னர் தேடும்போது கிடைப்பவற்றைப் படிப்பேன் அவ்வகையில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். அதிகமாக ஆங்கிலப்புத்தகங்கள்தான் காணப்படுகின்றன. அதுவும் மேலைத் தேசத்தவர்கள் தமது தேவைகளுக்காகச் செய்யும் ஆய்வுகளே இவையாகும்:

1. இன்னுமொரு ஜாதி
2. பெண்களும் தேசவழமைச் சட்டமும்
3. The powers of tamil Women
4. Women- chellenges to the year 2000
5. The Grouncing of modern feminism



---

## பறவையுடன் உங்கள்...

''என்ன ஒண்டும் பேசாமல் இருக்கிறாய்? எங்களிட்டைக் குடுக்கிறதுக்கு என்ன இருக்கு.

அது ஒரு காலம். காசைத் தான் கொப்பர் குடிச்சுக்கரைச்சிட்டாலும் சொத்தை நம்பி கலைப்படாம இருந்தம். இப்ப...''

அம்மா மாதந் தவறாமல் வாடகை வசூலித்தபடி இருக்கும் அந்த வீட்டுக்கூரையில் கண்களைக் குத்தியபடி பெருமூச்செறிந்தாள்.

''விரலுக்குத் தக்க வீக்கம் வேணும்''

அம்மா தனக்குள் பதிந்த நியாயத்தை முன்வைத்தாள். எதற்கும் முரண்டுபிடியாதது அவள் சுபாவம். இல்லாவிடில் தன் வாழ்நாள் முழுவதிலுமே குடித்துக் கொண்டேயிருப்பேன் என்று சபதம் எடுதத வர்போல் வாழ்ந்த அப்பாவோடு பொறுமையாக வாழ்ந்திருப்பாளா?

அப்பாவின் அடி, உதைகளைக் கண்டு அவள் கோபப்பட்டுக்குதித்தபோதும் அம்மா ''என்ரை தலைவிதி இப்பிடியாய்ப் போச்சுது'' என்று தன்னைத்தானே நொந்து கொள்வாளே தவிர, எதிர்த்துப்பேசாத ஒரு வாயில்லாப் பூச்சி.

காலங்கெட்ட நேரங்களில் அப்பா தள்ளாடியபடி வீதிகளில் விழுந்துகிடக்கும்போது அம்மா தாலிச்சரட்டைக் கண்களில் ஒற்றியபடி ''இதைப் பறிச்சிடாதை அப்பனே'' என்று கடவுளை மன்றாடுவாளேதவிர, அப்பாவைக் கண்டிக்காத ஒரு பிறவி.

இத்தகைய ஒரு பிறவியின் வாயால் 'விரலுக்குத் தக்க வீக்கம்' என்ற வார்த்தைதான் வரும் என்பது அவள் எதிர்பார்த்ததுதான்.

°° °° °°

பள்ளிக்கூடம் வழமைபோல சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. வெள்ளைச் சிட்டுக்களாய் சிறகடித்த அந்தப் பிஞ்சு முகங்களைப் பார்க்கிறபோது வழமையான உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது வரும்போதிருந்த மனக் குழப்பங்கள் நீங்கி, புத்துணர்ச்சி பெற்றவள்போல் இயங்கத் தொடங்கினாள்.

தனது வகுப்பு மாணவர்களின் நாள் வரவுப் பதிவுகளை மேற்கொண்டிருந்த போது, ''ரீச்சர் உங்களை அதிபர் வரட்டாம்'' என்ற அந்த மாணவியின் குரல் கலைத்தது.

அம்மா அவசரமாக வரும்படி கூறியிருக்கிறாளே! என்னவாக இருக்கும்?

விடுமுறை எடுத்துக் கொண்டு நடந்தவளது மனம் படபடத்தது. அம்மா ஏன் வரும்படி கூறினாள். ஏதேனும் சுகமில்லையோ? காலமையும் வழமைபோல சுறுசுறுப்பாகத்தானே இருந்தாள். அவள் மனம் சமாதானமடைய முயற்சித்தது. 'அம்மாவுக்கு ஒன்றும் நடக்கக் கூடாது' தனக்குள் கூறிக் கொண்டாள்.......

# பொருளாதார ஆய்வில் குடும்பப்பெண்

குடும்ப நலம் காக்க பெண்கள் பொருளாதார வளம்தேடி, சகல துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் போட்டி போட்டுக் கொண்டு வாழ்ந்து, உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் தன்னலமற்ற குடும்பப் பொறுப்புக்களுக்கும், வீட்டு வேலைகளுக்கும் ஊதியம் வழங்கப்படின் பொருளாதாரப்பெறுமானம்என்ன, அவை எவ்வாறு அமையும் எனவும் 1991ஆம் ஆண்டு மேற்கொண்ட கணிப்புகள் வியப்புக்குரிய தகவல்களை வழங்குகின்றன.

ஐரோப்பாவில் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி ஒரு பெண்ணுக்குக் குடும்பப் பொறுப்புக்களுக்கும், வீட்டு வேலைகளுக்கும் சமீபத்திய சந்தை விலையில் ஊதியம் கொடுக்கப்படின் இருபத்தைந்து இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஏனெனில் குடும்பத்தலைவி இருபத்து நான்கு மணி நேரமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்க முடியாது, சேவையாற்றவேண்டிய தயார் நிலையில் இருக்கின்றாள்.

இன்றைய காலகட்டங்களில் வீட்டு வேலைகளுக்குப் பணியாட்களைத் தேடிக்கொள்வது இலகு அல்ல. அப்படி அமைந்தாலும், அவர்களுக்கு ஊதியம், ஊண், உடைகளும் வழங்க வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடிகள் மத்தியில் கீழைத்தேசங்களைவிட மேலைத்தேய நாடுகளில் ஊதியம் கொடுத்து வேலைக்கு அமர்த்துவதும்கட்டுப்படியாகாது. ஒருவீட்டில் சமையல்காரி, சலவைக்காரி குழந்தைகளைக் கண்காணித்துக் கொள்ளும் செவிலித்தாய், தோட்டக்காரன், குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றும் ஆசிரியை என்றெல்லாம் கூலி கொடுப்போமானால் ஒரு தலைவனின் உழைப்பு ஈடுசெய்ய முடியாததாகும். எனவே ஒரு குடும்பத் தலைவியின் குடும்ப பொறுப்புகளுக்கான உழைப்பு பொருளாதார வளத்துக்கு மறைமுகமான பங்களிப்பு என்பதை மறுக்கமுடியாது.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்கள் தமது இல்லங்களில் குடும்பப்பாங்கான ஒத்துழைப்பை வழங்கியே தமக்குரிய ஊதியத்தையும் அந்நியச் செலவாணியையும் மீட்டுக்கொள்கின்றனர். இந்த ஆய்வுகளிலிருந்து கீழைத்தேய நாடுகளில் மத்திய வகுப்பைச் சேர்ந்த ஒரு இல்லத்தரசி வருடாந்தம் இரண்டு இலட்சம் வருமானம் பெறக்கூடிய பொருளாதார தகைமைக்குரியவள் எனக் கணிக்கப்படுகின்றாள்.

அன்றாட குடும்ப வேலைகளில் ஈடுபடும் ஒரு பெண் சாதாரணமாக மூன்று வேளை தினமும் சமைத்து உணவு வழங்கவேண்டும். அத்துடன் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளைக் கவனித்து உபசரிக்கவேண்டும். சிறப்பு வைபவங்கள், பிறந்தநாள் விழாக்கள் என்றெல்லாம் சமைத்தால் அவற்றுக்குரிய ஊதியம் வழங்கப்படின், சிந்தித்துச் செயற்படவேண்டும். ஒரு சமையற்காரரை வைத்தால் ஒரு நபருக்குச் சாப்பாடு வழங்க சராசரியாக நூற்றைம்பது ரூபா அறவிடப்படுகின்றது. சமையற்காரரின் மாதாந்த வருமானம் பெரும்பாலும் ஆயிரத்து இருநூறு ரூபாவாக இருக்கின்றது. எனவே வருடாந்தம் பதினான்காயிரத்துநானூறுரூபா செலவாகிறது. இந்த வருமானம் ஒரு குடும்பத்தலைவிக்குச் சேர வேண்டிய தொகையாகும். இந்த மறைமுக வருமானத்தைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. ஆனால் சிந்திக்கவேண்டிய காலம் நெருங்கி விட்டது.

அவ்வாறே ஆடைகளைச் சலவை செய்து அழுத்திக் கொள்ள சலவையகத்தில் ஒரு துணிக்கு சராசரியாக ஐந்து ரூபா ஐம்பது சதம் அறவிடப்படுகின்றது. குடும்ப அங்கத்தவர்களின் ஆடைகளைச் சலவை செய்து அழுத்திக் கொள்வதற்கு ஆகும் செலவைப்பற்றி எவரும் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. அவ்வாறே வீட்டில் கழுவும் பாத்திரங்களுக்கும் அளவு இருக்கமுடியாது.

சிறு குழந்தைகளைக் கவனித்து அவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் செவிலித்தாய்மாருக்கு ஊதியம் வேறு. மேலும் சந்தைக்குச் சென்று சமையற் பொருள்கள் வாங்குதல் போன்ற தொழில்ரீதியான கடமைகளும் இதனுள் அடங்கும். குழந்தைகளுக்கு வீட்டுப்பாடம் சொல்லிக்கொடுத்து, குழந்தைகளின் ஆடைகளைத் தைத்துக்கொள்ளுதல், வீட்டுக்கு வரும் கடிதங்கள், ஆவணங்கள்,படிவங்களைக்கவனமாகஎடுத்து வைத்துஅதற்கேற்பசெயற்படுதல்,இக்கட்டானசந்தர்ப்பங்களில்ஆலோசனை வழங்கி குடும்பப் பொறுப்புக்களைச் சமாளித்தல் போன்ற வேலைகளைச் செய்வதற்குரிய சம்பளம் வழங்கும் வேலையாளை வைத்துக் கொண்டால் நிலை என்னவாகும் என்ற சிந்தனையைத் தூண்டியுள்ளது அண்மைக்கால ஆய்வுகள்.

எனவே பொதுவாக ஒரு குடும்பத் தலைவியின் மறைமுகப் பொருளாதாரத் தகைமை வருடாந்தம் ரூபா ஒரு இலட்சத்து அறுபத்து மூவாயிரம் அல்லது மாதாந்தம் ரூபா பதின் மூவாயிரத்து ஐநூறு ஆகும்.

அன்றைய குடும்பப்பெண்களுக்கும் இந்தத் தகைமை உரித்தானதாகும். உழைப்புக்குரிய ஊதியம் பெண்களுக்கு வழங்கப்படாவிட்டாலும் அந்த வேலைகளுக்குரிய மதிப்பும், புகழ்ச்சியும் வழங்கலாம்.

ஆனால், பொதுவாகப் பெண்களுக்கு இந்த பொறுப்புள்ள சேவைக்குரிய மதிப்புக் கிடைப்பது தொன்றுதொட்டு அரிதாகவே இருந்து வருகிறது. குடும்பப் பொறுப்புக்கள் பெண்களுக்குரிய பாரிய கடமை என்று திணிக்கப்பட்டே வருகிறது என்பதை மறுக்க முடியாது.

பெண்களின் தன்னலமற்ற சேவைக்கு, மறைமுக பொருளாதார ஏடுகளில் என்றும் வரவுக்கணக்கு இருந்து கொண்டே இருக்கும். இந்தப்பற்றுச் சிட்டு நவீன ஆய்வுகளில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

நன்றி
வீரகேசரி

---

ஐந்து இளம் பெண்கள். அவர்கள் சண்டைகளில் புடம் போட்டு எடுக்கப்பட்ட வீராங்கனைகளாக இருந்தனர். இருந்த ஒரு பீரங்கிக் குழுவை அக்டோபரில் சந்தித்தேன். குறி பார்க்கும் ஒரு இள நங்கை,ஒன்பது பாசிச குண்டு வீச்சு விமானங்களை நோக்கிச் சுட்டு ஒரேயொரு விமானத்தை வீழ்த்தியதால் சோகமான முகபாவத்துடன் காட்சியளித்தாள்.ஏனென்று கேட்டதற்கு 2 - 3 விமானங்களை வீழ்த்தலாம் என்று சகதோழி சொன்னாளாம். இதை என்னால் மறக்கவே முடியாது.

62-வது படையின் தகவல் தொடர்பு யூனிட்டுக்களிலும் பெரும்பாலும் பெண்கள்தான் இருந்தனர். இடை நிலைத் தொடர்பு மையத்துக்கு அவர்களை அனுப்பினார்கள் என்றால், தகவல் தொடர்பு ஏற்படுத்தப்படும் என்று உறுதியாக இருக்கலாம். இந்த மையத்தை நோக்கி சாதாரண மார்டர் பீரங்கிகள் சுட்டாலும், விமானங்கள் இதன்மீது குண்டுமழை பொழிந்தாலும், எதிரிகள் இதைச்சுற்றி வளைத்தாலும் இப்பெண்கள் இருந்த இடத்திலேயே இறப்பார்களே தவிர உத்தரவின்றி நகரமாட்டார்கள்.

பசார்கினோ இரும்புப்பாதைச் சந்திப்பின் அருகில் இடைநிலைத் தொடர்பு மையத்தில் நடந்த ஒருசம்பவம் எனக்குத் தெரிய வந்தது. அங்கே ஒரேயொரு தகவல் தொடர்பு வீராங்கனை நாதியா கிளிமேன்கோ மட்டுமே உயிரோடு எஞ்சினாள். அவளுடைய சகதோழிகள் கொல்லப்பட்டனர் அல்லது காயமடைந்தனர். கிளிமேன்கோ தன் இடத்தை விட்டு அகலாமல் போர்க்களத்தில் நடப்பதைப்பற்றி கடைசி நிமிடம் வரை தகவல் அனுப்பினாள். இதோ படையின் தகவல் தொடர்புமையத்துக்கு அவள் அனுப்பிய கடைசி செய்திகள் ''தகவல் மையத்தின் அருகே நம்மவர்கள் யாருமில்லை! நான் மட்டுமே எஞ்சியுள்ளேன். சுற்றிலும் குண்டுகள் வெடிக்கின்றன. எனக்கு வலது புறம் எதிரி டாங்கிகள் நகருகின்றன. அவற்றின் பின் காலாட்படையினர் வருகின்றனர். நான் இங்கிருந்து போகக் கூடாது. எப்படியிருந்தாலும் சுடப் போகின்றனர். தகவல் அனுப்புவேன். கேளுங்கள்: நான் இருக்கும் மையத்துக்கு டாங்கி ஒன்று வருகிறது. அதிலிருந்து இருவர் கீழிறங்குகின்றனர். அவர்கள் இராணுவ அதிகாரிகளைப் போலிருக்கின்றனர். அவர்கள் என்னை நோக்கி வருகின்றனர்...'' இந்த இடத்தில் தொடர்பு அறுபட்டது.

62-வது படையில் இருந்த ஒரு தகவல் தொடர்பு பெண்மணியை நான் 1950ஆம் ஆண்டுகளில் சந்தித்தேன். அவர் பெயர் ரஸுமேயெவா. அவர் அப்போது ஸ்மெலியான்ஸ்கி வட்டகம்யூனிஸ்டு கட்சி கமிட்டியின் செயலாளராக இருந்தார். முதல் முதலில் அப்பெண்ணை 1942 செப்டெம்பர் 13ல் மமாயெவ் குன்றில் சந்தித்தேன். அப்போது தகவல் தொடர்பு மையம் பாசிச குண்டுகளால் தகர்க்கப்பட்டிருந்தது. அவளோ தொலைபேசி அருகே அமர்ந்தபடி தொடர்ந்து படைப்பிரிவுகளின் கமாண்டர்களுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

ரஸுமேயெவா படைக்கு தானே விருப்பப்பட்டு, உணர்வு பூர்வமாக வந்தாள். தாயகத்தைப் பாதுகாக்க தன் சக்திகளையும் திறமைகளையும் முழுக்க முழுக்க அர்ப்பணித்தாள். 1943ல் அவள் கம்யூனிஸ்டுக் கட்சியினுள் சேர்த்துக்கொள்ளப்பட்டாள். இராணுவத்திலிருந்து வந்ததும் ஆசிரியையானாள். 1949 முதல் கட்சிப் பணியில் இருந்தார்.

எளிமையான, கருத்தாழமுள்ள பெண்மணியாக தோற்றமளித்த அவர் தன் போர்க்களத் தோழிகளைப் பற்றிமட்டுமே பேசினார். அவரைப் பற்றி, அவர் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதைப் பற்றி நான் நேரடியான கேள்விகளைக் கேட்ட போது மட்டுமே அவர் தன்னைப்பற்றிப் பேசினார்.

''என்னைப்பற்றியா?'' என்று கேட்டு வியப்போடு தன் தோள்களைக் குலுக்கினார் அப்பெண்மணி. ''என்னைப் பற்றித்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மமாயெவ் குன்றில் என்னுடன் கூட மரீயா குலியாயெவா- கமிஷீன் கிராமத்திலிருந்து வந்த சிறுபெண் - இருந்தாள்; இச்சிறு பெண்ணுடன் சேர்ந்துதான் நான் 1942 செப்டெம்பர் 12 இல் தகவல் தொடர்பு மையத்துக்காக இடையறாதகுண்டு மழையின் கீழ் ஒரு பதுங்கிடத்தைத் தோண்டினேன். அப்பெண்ணோடும் பின் ஷுரா ஷெஷேனியா எனும் பெண்ணோடும் சேர்ந்து நான் தகவல் தொடர்பு சாதனத்தருகே டியூட்டியில் இருந்தேன். நகரத்தில் வேறிடங்களில் தாயா விதோவினா, வியூபாஸ்துக்காலவா, கிளாவ்தியா ஷ்தோன்தா, லேனா பிரிதோல்ச்சினா, இன்னும் சில பெண்கள் இருந்தனர்... 1942 ஆகஸ்டு 31ஆம் திகதி என்ன நடந்ததென நினைவிலிருக்கிறது. யாப்லானிவயா பள்ளம், ஃபாலிய ரேஸ்னிக் தம் தோழியுடன் கூடாரத்தில் கம்பியில்லாத் தொலைபேசி சாதனத்தின் அருகே அமர்ந்திருக்கின்றனர். அது திறந்த வெளியிலிருக்கிறது, அருகில் சிறு அகழி மட்டும் இருந்தது.

எதிரி குண்டுவீச்சு விமானங்களின் ஓசை அவர்களுக்குக் கேட்கிறது ஆனாலும் அவர்கள் இடத்தைவிட்டு நகரவில்லை. பாஸிஸ்டுகளின் தாக்குதலைப்பற்றி, எங்களுடைய படைப் பிரிவுகளில் ஒன்றின் பின்புறத்தில் எதிரி டாங்கிகள் நுழைந்து விட்டதைப்பற்றி உடனடியாகச் செய்தி அனுப்ப வேண்டும். ஃபானியாவோ, அவளருகே இருந்த தோழியோ, யாருமே இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. என்ன ஆபத்து வந்தாலும் தோழியைவிட்டு நகரக்கூடாது என்பது அந்தந் தகவல்தொடர்பு வீராங்கனைகளின் மரபாயிருந்தது.

பறந்து வந்த விமானங்களைப் பார்த்து, குண்டுகளின் ஊளை ஒலியைக் கேட்டு, அவை விழுந்து வெடிக்கும் என்று அப்பெண்கள் தோராயமாக நிர்ணயித்தனர். ஒரு முறை, இரண்டுமுறை விமானங்கள் வந்து சென்றன. அவர்களோ தகவல் அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்... விமானங்கள் மூன்றாம்முறை பறந்து வந்தன... கூடாரமிருந்த இடத்தில் குண்டுவிழுந்த இடத்தில் குழி மட்டுமே எஞ்சியது.

அன்று சம்பவங்கள் மிக விரைவாக நடைபெற்றதால் எங்களுடைய போர்க்களத் தோழியரைப் புதைக்கக்கூட முடியவில்லை. தம் கடமையைச் செய்து மாண்ட செஞ்சேனையின் சாதாரண வீராங்கனைகள் யாப்லனிவயா பள்ளத்தில் என்றென்றைக்குமாக மீளாத்துயில் கொள்கின்றனர்...''

தனது நெருங்கிய தோழியாகிய ஷுரா ஷெஷேனியாவைப்பற்றியும் அன்று ரஸுமேயெவா எனக்குச் சொன்னார்.

''யுத்தத்துக்கு முன் அவள் அனாதை குழந்தை இல்லத்தில் பணி புரிந்தாள். செஞ்சேனையில்சேர விருப்பம் தெரிவித்த ஒரு சில கம்சமோல் நங்கைகளை இராணுவப் பிரிவு அலுவலகம் அழைத்ததைக் கேள்விப்பட்ட ஷுரா நேரடியாக அனாதைக் குழந்தை இல்லத்தின் இயக்குனரிடம் சென்று தான் போர் முனை செல்ல விரும்புவதாக அறிவித்தாள்.

1942 ஏப்ரல் இறுதியில் ஐந்து சக கம்சமோல் தோழிகளுடன் ஷுரா - அந்நேரத்தில் அவள் ஏற்கனவே கட்சியின் தேர்வு உறுப்பினராக இருந்தாள்- இராணுவப்பிரிவு அலுவலகத்துக்குச்சென்றாள். எல்லா பதிவு வேலைகளும் ஒரேநாளில் முடிந்தன. மே 2ஆம் தேதி இப்பெண்களை இராணுவத்துக்கு வழி அனுப்பினர். ஆஸ்திரகனில் ஒரு மாத தொலைபேசி ஆப்ரேட்டர் பயிற்சிக்குப் பின் ஷுரா, 115வது வலுப்படுத்தப்பட்ட மண்டலத்தின் தனி தகவல் தொடர்பு கம்பனிக்கு வந்து தோன் ஆற்றின் கரையில் ஆப்ரேட்டராகப் பணிபுரியத் தொடங்கினாள். அன்று முதல் மிகக்கடினமான சூழ்நிலையிற்கூட அவள் தன்னிடத்தைவிட்டு நகரவில்லை.

நன்றி
சகாப்தம் படைத்த ஸ்டாலின்கிராட்

## கரவெட்டியில்

றின் நடுவில் திண்டாடும் தாய்மார் தங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு வலுவற்றவர்களாக இருக்கின்றனர்.

சுகாதாரச் சீர்கேட்டினால் ஒருபுறம் தொற்றுநோய்களும் போசாக்கின்மை, குருதிச் சோகை போன்றவற்றினால் சூழப்பட்ட சிறுவர் சமுதாயத்தில், சிறுவர்களின் எதிர்கால வளர்ச்சி என்ன? இதற்குப் பொறுப்பானவர்கள் பெற்றோர்களே என்று ஒட்டுமொத்தமாகக் கூறாவிடினும் ஆழ்ந்துநோக்குகையில் பெண்களின் கல்வியறிவு பற்றிய பிரச்சினையே மேலோங்கி நிற்கிறது.

குழந்தை பிறந்த சில நாட்களில் நோய்வராமல் தடுப்பூசி ஏற்றுதல் என்ற தெளிவு அற்ற நிலையில் போலியோ வாற்பாதிக்கப்பட்டோர்வாழ்க்கை நிலை, பொருளாதாரத் திட்டமிடல் அற்றநிலை,இவற்றின் முக்கியமான மூலப் பிரச்சினையாக நிற்பது கல்வியறிவற்ற தன்மையேயாகும்.

எனவே வளர்ச்சியுடைய திட்டமிட்ட குடும்ப அமைப்புக்கோ அன்றி சமூக அமைப்புக்கோ கல்வியறிவே இன்றியமையாதது.அதுவும் அமைப்பின் முக்கிய பாத்திரமாக நிற்கும் பெண்கள் குறைந்தது சாதாரண கல்வியறிவையேனும் பெற்றிருத்தல் மிக முக்கியமானது. இதுவே குடும்ப அமைப்பைச் சீர்படுத்த உதவும்.

இக்கிராமியப் பாசறையில் கண்டு அறியப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக குழந்தைகள் காப்பகம், பாலர் பாடசாலை, முதியோர் கல்வித்திட்டம் என்பன விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் செய்யப்படவுள்ளன.

---

வாசகர்களிடமிருந்து கருத்துகள், ஆக்கங்களை வரவேற்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சுதந்திரப்பறவைகள், வெளியீட்டுப்பிரிவு,
கோண்டாவில்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**